மாருதம்

'MAARUTHAM' – A PROLETARIAN FORCE

இந்த
இதழில் :

மீரா
சோலைக்கிளி
சபா. ஜெயராசா
யோ. பெனடிக்ற் பாலன்
பாண்டியூரன்

அ. செ. மு
சித்தார்த்தன்

கா. சிவத்தம்பி
டொமினிக் ஜீவா
பூ. அ. துரைராஜா
மார்க்ஸ் – டாக்டர் என் ஆர்

நந்தன
காண்மபன்
தேவ மைந்தன்

கௌரவ ஆசிரியர் : காவலூர் எஸ். ஜெகநாதன்

1 ஆனி 1983 ரூபா இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கச் சிறந்தது மாருதம்
குடிக்கச் சிறந்தது

எவர் - றெஸ்ற்

எங்கள் தயாரிப்புக்கள்:

எவர் - றெஸ்ற் லங்காஜு தேயிலை

எவர் - றெஸ்ற் ரேஸ்ற்ரி தேயிலை

707 எவர் - றெஸ்ற் கோப்பி

அரச பரிசோதனையில்
சுத்தம், சுகாதாரம் என்று
நிரூபிக்கப்பட்டது.

எவர் - றெஸ்ற்
இன்டஸ்ரீஸ்
&
டிஸ்ரிபியூற்றேர்ஸ்

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மாருதம்

இரண்டாவது இதழ்

இருளைக் கிழி - புது
உலகம் அமை

கௌரவ ஆசிரியர்:
காவலூர் எஸ். ஜெகநாதன்

ஆசிரியர்:
நாவையூர்-காண்டீபன்.

அமைப்பு:
ஆ. சுரேஸ்

பிரமித்துப் போய்விட்டோம்.

'மாருதம்' முதலாவது இதழை வெளியிட்டபோது நாம்கூட இவ்வளவுக்கு எதிர்பார்க்கவில்லை. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பாராட்டுக் கடிதங்கள் வந்துகுவிந்தன. நேரில் காண்கிற சகலரும் மாருதத்தை மனம்விட்டுப் பாராட்டியபடி....விளைவாக...எம் பொறுப்பு அதிகரிக்கிறது.

இன்னும் இன்னும் மாருதத்தை சிறப்பாகவும் காலகாலத்திலும் வெளிக்கொண்டுவர எம் உழைப்பை முழுமையாக அர்ப்பணிக்க நெறிப்படுத்துகிறது.

மாருதம் தேச நிலைமைகளைச் சரிவரப பிரதிபலிக்கவேண்டும் என்று பலரும் குறிப்பாக இளைஞர்கள் அவாவுகின்றனர். பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாது சரியான திசை வழிகளையும் சுட்டிக்காட்டத் தவற மாட்டோம்.

ஈழத்து எழுத்தாளர்களுக்கு–குறிப்பாக முற்போக்கு எழுத்தாளர்களுக்கு முனைப்புப் பெற்றுள்ள இனப்பிரச்சனைமீது போதுமான அக்கறையில்லையென்று பல மேடைகளிலும் குத்திக்காட்டப்படுகிறது. தமிழ் எழுத்தாளர்கள் என்று மட்டும் பாராது இருபக்கத்திலுமுள்ள எழுத்தாளர்களையும் கவனத்துக்கு எடுத்து அதுபற்றிய ஒரு விவாதத்தை மாருதம் தொடங்கவுள்ளது.

திட்டங்களோ மனதில் நிறைய......
மெல்லமெல்ல அவை செயல் வடிவம் பெறும்.

வந்து குவிந்துள்ள படைப்புக்களை மிகுந்த கவனத்துடன் படிக்கிறோம். தேர்வு பெறுபவை அடுத்தடுத்த இதழ்களிலும் வெளிவரலாம். எதற்கும் மேலும் மேலும் உங்கள் படைப்புக்களை அனுப்பி எமது பணியை அதிகரியுங்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுங்கள்

O சாகித்திய மண்டல பரிசுகளை பகிஷ்கரிப்பது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

எஸ். சந்திரகாந்தன்
கோப்பாய்

காத்திரமான காரணங்களை முன்வைத்து பகிஷ்கரிப்பதுஎன்று வந்துவிட்டால் பகிஷ்கரிக்கப்படுகிற விடயமும் காத்திரமாக இருக்கவேண்டுவது அவசியம். கலாச்சார அமைச்சுக்குப் புறம்பாக அதுவும்இராசதுரை என்கிற மந்திரியின் கீழ் வெறும் பேச்சளவில் விளம்பரப்படுத்தி இவ்வளவு காலமாகிய பின்னும் பரிசளிப்புப் பற்றி மூச்சுவிடாத நிலையில் இனியும் மூச்சு வருமா? என்பது ஐயமான நிலையில் பகிஷ்கரிப்பு என்று முஷ்டியைத் தூக்குவது ஒன்றும் அர்த்தமுள்ளதாக தெரியவில்லை. பரிசு அறிவிப்புப் பற்றி அவ்வளவு அக்கறைதேவையில்லையென நினைக்கிறேன். பரிசு பெற்றவர்களுக்கும்தான்.

O சரித்திர ஏட்டின் நெருப்புப் பக்கங்களின் போது மலர்ந்துள்ள மாருதம் இன ஒடுக்கு முறைபற்றி பிரலாபிக்கவில்லையே காரணமென்ன?

க. சுந்தரலிங்கம் - வவுனியா.

கேள்வியிலேயே பொறி பறக்கிறது. உங்கள் நியாயமும் புரிகிறது. இன ஒடுக்குதல்களை மட்டுமன்றி நம்மால் 'கொடுமை' என்று உணரப்படுகிற அனைத்துக்கும் எதிராக மாருதம் துணிந்து குரல் கொடுக்கும். இனவெறிக்கு இனவெறி என்று இல்லாமல்

திறக்கப்படும்

புத்தி பூர்வமாக பிரச்சனைகளை அலசுகிற ஆக்கங்களை வரவேற்போம். பிரசுரிப்போம்.

O மாருதத்துக்கு யாரும் எழுதலாமா?

க. பிரேமா – கிளிநொச்சி

யாரும் எழுதலாம். எதை எழுதலாம் என்பதில்தான் வரையறையுண்டு.

O அண்மைக் காலத்தில் கவனத்தை ஈர்க்கிற புதிய எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்களா?

எல். எம். மன்சூர் - மன்னார்

நாளுக்கு ஒன்றாக நடக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியல்ல இது. புதுப்புது எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள். தேறப்போகிறவர்களை முடிவாக எடைபோட சிறிது காலம் போகவேண்டும். சிவத்தம்பி அவர்கள் ஒருமுறை எழுதியதுபோல தேற விரும்புகிற எழுத்தாளர்கள் தமக்கு உடன்பாடான ஏதாவதொருசிறுபத்திரிகையுடன் தொடர்பு வைக்கவேண்டும். எமக்கு வருகிற படைப்புகளையே எடுத்துக் கொண்டால் பெரும்பாலானவை பெயர் பெற்றவர்களின் படைப்புக்களாகவேஇருக்கின்றன. தேசியப்பத்திரிகைகளில்தான் புதிய பெயர்களைக் காண்கிறோம். இந்நிலைமைஎதிர்காலத்துக்கு ஆரோக்கியமானது என்று சொல்ல முடியாது.

O வி. பொன்னம்பலம் அவர்கள் திரும்பவும் மேடைக்கு வந்துவிட்டாரே?

சி. கனகராசன் அச்சுவேலி

இப்படிப் பலர் வருவதும் போவதுமாகத்தான் இருக்கிறது. நம் நாட்டு மேடை. கூட்டணி மேதினக் கூட்டத்தில் வி. பி. தான் கடைசிப் பேச்சாளர் எம். பீ மாரையெல்லாம் தடக்கித் தடக்கி தலைவர் என்றுவிழித்தவர் -சங்கமமான பிறகும் கூட்டணியின் ஓர் 'அங்கமாக'தான் இயங்குவதாகக் 'கூச்சத்துடன்' சொல்கிற அளவுக்காவது விவஸ்தை இருக்கிறதே. போகட்டும், கூடிய கொஞ்சக்கூட்டமும் ஏனோதானோ என்றிருந்தது. குண்டுகளுக்கும், குழப்பங்களுக்கும் பயந்துதான் சனம் சேரவில்லை என்றார்கள் மக்களைப் புரியாதவர்கள். உண்மை என்னவென்றால் மக்கள் இவர்களின் பேச்சில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்பதுதான்.

O அண்மைக் காலத்தில் சிறு சஞ்சிகைகள் நிறைய வெளிவரத் தொடங்கியுள்ளது. பிரசுரச்செலவுகளும் சிரமங்களும் மிகவும் அதிகரித்துள்ள நிலையில் இதுஎப்படிச் சாத்தியமாகிறது?

தி. பிரபாகரன் -மட்டக்களப்பு

ஒன்றைக் கவனித்தீர்களா? சிலுக்கு,ஜனரஞ்சகம் என்றுஒன்று இரண்டைத்தவிர பலதும் பயன்மிக்க முறையிலேயே வெளிவருகின்றன. எழுத்தாளர்களுக்கு சாதன வசதிகள் அதிகரிப்பதும் நல்லதுதானே. இந்தியப் பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு என்று வந்த காலத்தில் தோன்றியதையும்விட-இன்று சஞ்சிகை வெளியீடுபற்றி நினைக்கவேஅஞ்சவேண்டிய நிதி நிலைமைகளில் அதிகம் பத்திரிகைகள் வெளிவருகிறது என்றால் சாத்தியப் பாடு குறைகிறபோதுதான் சாத்தியமாக்குகிற முயற்சிகள் பெருகும் என்பதுதான் அதற்கு காரணம். தொடங்குவது மட்டும் போதாது. எவ்வளவு தொடரும் என்பதில்தான் எமது கவனமெல்லாம்-மக்களின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியமில்லை. அந்த ஆதரவு கிடைக்குமென்றால் ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் ஒரு பத்திரிகையென்ன, ஒன்பது பத்திரிகை தோன்றினாலும் சந்தோஷப்பட வேண்டியது தானே.

O அலையிலும் கீற்றிலும் ஒரே சிறுகதைசமகாலத்தில்இடம்பெற்றது பற்றி? சிறு இலக்கியப் பத்திரிகைகளிலுமா இந்தக் குளறுபடி?

ம. கதிர்காமநாதன்
முல்லைத்தீவு

தேவமைந்தன் பதில்கள்

ஒவ்வொரு பக்கத்துக்கும் இந்தச் சிறு பத்திரிகை வெளியிடுபவர்கள் ஏற்றுக்கொள்கிற சுமை அளப்பரியது. இத்நிலையில் இப்படி நேர்வது சம்பந்தப்பட்ட எழுத்தாளரின் பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகிறது. அது ஒருபுறமிருக்க அந்தக் கதையே வயிற்றைக் குமட்டுகிற சங்கதிகளைக் கொண்டது. ஒயில் போடுவது, பார் சோப் பாவனை, கதை எழுதியவருக்கு இங்கிலீஸ் தெரியுமான முயற்சி என்று பல. தனது அனுபவத்தை எழுதுகிறான் அதுதான் போலியற்றது என்று உன்னதக் கலை – அலைகள் கூறினால் அதற்கும் ஒரு வரம்பு கிடையாதா? வீட்டிலே கொண்டு போய் படிக்கமுடியாதவை தமிழக வியாபாரப் பத்திரிகைகள் மட்டும் அல்ல உள்ளடக்கத்திலே நாங்களும்தான் என்று இவர்களும் முந்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்து அலரியின் கதை

—o— — சோலைக்கிளி

காலையிலே;
கதவைத் திறந்தால் கண்ணெதிரே சிவப்பாக
நிற்கின்ற அலரியுடன் நெருக்கம் எனக்குண்டு.
பரட்டை விரித்து பார்ப்பதற்குத் தேவதைபோல்
வளர்ந்து எத்தனையோ வயதுகளை விழுங்கிவிட்ட
இதற்கும்,
எனக்கும்,
உள்ள இரகசியம் ஒருவருக்கும் விளங்காது.
சொல்கின்றேன்;
நமக்குள் இருக்கட்டும் நாய் நரியும் அறியாமல்.
சின்ன வயதில் சட்டையின்றித் தெருவெல்லாம்
அலைந்து புழுதி அளைந்து திரிகையிலே
ஒருநாள்
தூரத்து
வீடொன்றில் "மாங்கன்றாய்" வளர்ந்து துளிர்விட்ட
இதனைப் பார்த்தவுடன் இதயத்தைப் பறிகொடுத்து
அன்றேதான்
செக்கலுக்குள்
களவாகப் பிடுங்கிக் கொண்டுவந்து நட்டேன்.
கேளுங்கள்;
நீரூற்றி,
எருவிட்டு,
நண்பர்கள் குருத்தை நோண்டுங்கால் தலையிட்டு,
கண்ணைப்போல் இதனைக் காத்த சுவையான
கெட்டித் தனமுள்ள கதைகள் ஏராளம்.
எனவேதான்;
கதவைத் திறந்தால் கண்ணெதிரே புன்னகைத்து
நிற்கின்ற அலரியுடன் நெருக்கம் உண்டென்றேன்.
ஆனாலும்;
இப்போது
அன்று இதிலிருந்த ஆசை எனக்கில்லை.
மாடு கடித்து மரத்தினையே தின்றாலும்,
வேரோடு யாரும் வெட்டி எறிந்தாலும்,
விருப்பம்தான்.
ஏனென்றால்..........,.
பூமரத்தை;
நெஞ்சினிக்க ரசிக்க நிம்மதியே இன்றில்லை.

முகங்கள்

சித்தார்த்தன்

"ஐயா..."

ஐயா வரவில்லை. அம்மாதான் பல தடவைகள் குரல் கொடுத்துக் களைத்தபின் யன்னலால் முகம் காட்டினாள்.

"ஆரது..."

இவனது தொண்டைக் குழியில் வார்த்தைகள் சிக்கின. பதில் இல்லாமல் அவள் முகத்தையே... அவள் முகத்தை உள்ளே இழுத்துவிட்டதால் பிளந்தவாய் மூடாத யன்னலையே வெறித்துப் பார்த்தான். திரும்பவும் "ஐயா..."

இப்போது எரிச்சலுடன் முகம் காட்டினாள். அது இவனுக்கு வருத்தமாக இருந்தது. பூரிப்போடு இருந்த அவள் முகம் கறுத்துப்போய் விட்டதால் ஏற்பட்ட வருத்தமல்ல அது. அந்த அழகுகள் எல்லாம் அவன் மனதை அருட்டிய காலம் அவனுக்கே நினைவில்லாமல் மறந்துபோயிற்று. இப்போது அவள் முகம் கறுக்கிற தன் நிலைக்காக வருந்தினான்.

"ஐயா இருக்கிறாரா.."

சாதகமான பதிலுக்கான நம்பிக்கையுடன் கேட்டான்.

"ம்... நீங்க யாரு"

இவனுக்குக் கண்ணில் நிறைந்துவிட்டது. இவ்வளவு நாட்கள் இந்த வீட்டுக்கு அலைகிறான். அவள் இப்படிக் கேட்கிறாள். முயற்சித்து நாக்கை ஈரமாக்கிக் கொண்டு சொன்னான். "மகேஸ்வரன் எண்டால் அவருக்குத் தெரியும்"

"ம்..." என்றுவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள். இவன் வெளியிலேயே...

உள்ளே ஒரு சிடுசிடுப்பு நடக்கும்.

"இல்லையெண்டு சொல்லி விடுகிறதுதானே..."

ஆரம்ப அந்தரத்தில் ஒரு துள்ளு. அம்பாக விர் என்று புறப்பட்டது பிறகு மலராய் அவள் காலடியில்..

"சரி பார்ப்பம்"

வந்து கதவைத் திறக்கிறான்.

முன்னால் மகேஸ்வரன். இவனிடம் நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் வந்தபோதெல்லாம் கூட வந்த லோங்ஸ் வெளிறியிருந்தது. சேர்ட்டும் அழுக்கேறி... கிழிசல்களும் தையல்களுமாக... அவனது வாழ்வின் வசந்தம் முழுவதையும் வாரிவிட்டதாக இவன். பறி கொடுத்தவனாய் மகேஸ்வரன்.

"என்ன..." மூக்காலேயே மூக்குக்கண்ணாடியைத் தூக்கி இறக்கிவிட்டு ஒரு பார்வை பார்க்கிறான்.

மகேஸ்வரனுக்குச் சுள்ளென்று தைத்தது. இவ்வளவுக்குப் பிறகும் என்ன என்று கேட்கிறான்.

பதில்...

உண்டான ஆத்திரம் என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியாத பதட்டத்தில் அவனைப் பரபரக்க வைக்கிறது. பல்லைக் கடிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளிகளே!

உங்கள் படைப்புக்களை
எங்களுக்கு அனுப்பி
உங்களை எங்களுக்கு
இனம் காட்டுங்கள்
உங்களை நாங்கள்
உலகுக்குஇனம்காட்டுவோம்

முகவரி:

ஆசிரியர் – 'மாருதம்
43, பிரப்பங்குளம் லேன்
யாழ்ப்பாணம்.

"ம்... உம்மட விசயம் பெரியவரோட கதைச்சனுன். மினிஸ்ட்ரிக்குப் போயிற்றுது. சரிப்பண்ணிப் போடுவன்."

நாடியைத்தடவுவதே சரிப்பண்ணுகிற காரியமாக ஆகிறுன்.

மகேஸ்வரன் மௌனமாக இருந்தான்.

'இப்பிடிச் சுணங்கும் எண்டு தெரிஞ்சிருந்தால் முந்தின லிஸ்ற்றிலை போட்டிருப்பன். பதினுறு பேருக்கெல்லே எடுத்துக் குடுத்தனுன்."

மகேஸ்வரன் பெருக்கல் கணக்கில் ஈடுபட்டிருந்தான்.

''ஐசே ஆரும் கேர்ள்ஸ் இருந்தால் சொல்லும் ரைப்பிங் தெரிந்தவையாக...''

''என்ர விசயம்...''

''எப்பிடியும் ஒரு மாசத்துக்குள்ள சரிப்பண்ணித்தாறன்.''

மகேஸ்வரனுக்குத் துளியும் நம்பிக்கையில்லை. ஐம்பது தடவைக்குமேல் இந்த நாடகம் பார்த்தாயிற்று. இன்று முடிவாகச் சொல்வதென்றுதான் வந்திருந்தான்.

'எனக்கு வேலை வேணும்''

''என்ன கதை ஐசே''

,'வேலை வேணும் நான் தந்த காசு இருபதாயிரத்தையும் தந்தா போதும்''

"இன்னும் ஒரு மாசத்தில''

''இப்பிடி எத்தினையோ மாசம் போயிற்றுது உமக்குக் காசுதர ஈடு வைச்ச காணியும் விலைப்பட்டுப் போச்சுது நாங்க இப்ப நடுத்தெருவில...''

''கவலைப்படாதையும் தம்பி வேலை கிடைச்சால் எல்லாம் ஒரு செக்கனிலை''

''ஒண்டும் வேணும் என்ர காசு'' மகேஸ்வரன் சூழ்நிலையின் பட்டறையில் நெருப்பாகக் கனன்ருன்.

அரசாங்கக் கட்சியின் பிரமுகருக்கு தலைமை எடுபிடியாகஇருந்தவன் இவன்.இவனை நம்பி பணம் கொடுத்து அலைகிறவன் மகேஸ்வரன் மட்டுமல்ல பெரிய பட்டாளமே உண்டு. அதிலே ஒருத்தன் கூறியிருக்கிருன் மகேஸ்வரனுக்கு.

"இவன் இப்ப 'பெரியவரோட' வாலாகவும் இல்லையாம் அவரே இவனைச் சிகிக்க ஏலாமல் விரட்டிப்போட்டாராம்''

(மிகுதி 31 ஆம் பக்கத்தில்)

சுமார் 57 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கிடைப்பதென்ருல் அதன்மூலம் கோடிக்கணக்கான ரூபா வெளிநாட்டுச் செலாவணி சம்பாத்தியம் கிடைக்கிறதென்ருல் யாருக்குதான் மகிழ்ச்சி ஏற்படாது. யார்தான் பாராட்டமாட்டார்கள்.

ஈழநாடே

இந்த மகிழ்ச்சிக்கு மத்தியில் அந்தப்பாட்டாளி மக்களின் நெஞ்சுக்குள்ளேயே தோன்றி அங்கேயே சங்கமம் ஆகிவிடும் உள்ளக்குமுறலை ஊமைக் குரலை யாருமே தட்டிக்கழித்துவிட முடியாது,

நிரந்தரமற்றவேலை. சுகவீன லீவுகூடக்கிடையாது,

போனஸ் என்ற பேரில் கிடைக்கும் பணம் சம்பளத்தில் எப்படியோ கழிக்கப்படுகிறது அவர்கள் பயந்து பயந்து கூறிய...

எங்கள்

பத்திரிகையாளர்களுக்குச் சிறந்த வரவேற்பும் வசதிகளும் கிடைத்தன. வயிருரக் காலை உணவு வலயத்தைப் பார்வையிட்ட பின் தாகந்தீரக் குளிர் பானம், காப்பி, சிற்றுணவு கவனிப்புகளும்...

வேலை இருக்கிறது நிரம்ப..

மீரா

வேலை இருக்கிறது நிரம்ப – என்னை
 வேகப் படுத்திவிடு தாயே - பசுஞ்
சோலை மரத்தின்குளிர் நிலவில்– மனஞ்
 சொக்கவைக் கும்பூ நகையில் - அந்தி
மாலை மதியமுத எழிலில் – நான்
 மயங்கிக் கிடந்தேனே நாளும் – ஆ!
வேலை இருக்கிறது நிரம்ப – என்னை
 வேகப் படுத்திவிடு தாயே!

பள்ளிக்குப் போய்வந்த நாளில்
 – சின்னப்
 பட்டங்கள் விட்டுவிளை யாடிப் - பல
வெள்ளித் திரையில்மினு மினுக்கும்
 – சில
 வேட மயமுகங்கள் கண்டு – நான்
துள்ளித் திரிந்தேனே யல்லால் – என்ன
 தூய பணிசெய்தேன் தாயே
 – என்றன்
உள்ளந் தனில்கனல் மீட்டி – என்னை
 ஊருக் குழைத்திடச் செய்வாய்!

காளைப் பருவத்தில் எல்லாம் – சுகக்
 கன்னிக் கனவினில் மூழ்கித் – தினம்
வேளை தவருமல் உண்டு – திண்ணை
 வீழ்ந்து துயில்கொண்ட தல்லால்
 – இரு
தோளைத் திரண்டமலை யாக்கி – நான்
 தொண்டு புரிந்ததுவும் இல்லை - இனி
நாளை உலகத்திற் கேனும் - என்னால்
 நன்மை விளைந்திடச் செய்வாய்!

மேடை பலப்பல ஏறிக் – கரு
 மீசை முறுக்கியே நின்று - நித்தம்
கோடை இடியாய் முழங்கி - ஒரு
 கூட்டம் தனைச்சேர்ந்த தல்லால்–சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடை முடைந்ததும் இல்லை – உனைக்
குழ்பிட்டுக் கேட்கிறேன் தாயே–நான்
பாடையில் ஏறிடும் முன்னர்-ஒன்றைப்
படைத்த பெருமை அளிப்பாய்!

அற்பக் கதைகள் படித்து – மன
தாரக் குடித்துக் களித்து - உடல்
விற்கும் வனிதையர் நிற்கும் - தெரு
வீதி இருட்டில் ஒதுங்சி - உயிர்க்
கற்பை இழந்தது மல்லால் – நல்ல
காரியம் என்ன நான் செய்தேன–நவ
சிற்பி இவனென என்னை – வையம்
செப்பிடச் செய்திடு வாயே!

மலையை உடைத்திட வேண்டும்
– மின்னும்
மணியை எடுத்திட வேண்டும்
- கடல்
அலையில் குதித்திட வேண்டும்- முத்தை
அள்ளிக் கொணர்ந்திட வேண்டும்
– காட்டு
நிலத்தை உழுதிட வேண்டும் – செந்
நெற்குவை கண்டிட வேண்டும்-நான்
கலையிற் சிறந்திட வேண்டும் – கோடிக்
கவிதை படைத்திட வேண்டும்.

வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
வேகப் படுத்திவிடு தாயே - கொடும்
பாலை வனத்தினைப் போலே – நான்
பாழ்பட் டிருந்தது போதும் – வீரப்
பாலைக் கொடுததிடு வாயே – வெற்றிப்
பாக்கியம் நீதரு வாயே – அதி
காலைக் கதிரவன் போலே – முகங்
காட்ட அருள்புரி தாயே!

**O சுதந்திரத்துக்குப் பிறகு
இந்தியத் தமிழ்க் கவிதைகள்
என்ற தொகுப்பிலிருந்து...**

ஈழநாடே

அரசுக்கும் இந்தவலயத்தின் காரணகர்த்தாக்களுக்கும் மனமாரப்பாராட்டவே...

ஃ எமது நாட்டின் உழைப்பினை, வளங்களை அந்நியநாட்டுக் கொள்ளையர்கள் சுரண்ட பூரணகும்பம் வைத்துவரவேற்கிறசுதந்திரவர்த்தக வலயத்தை மலேசியப் பிரதமருக்கு சுற்றிக்காட்டி அரசு புளகமுற்றபோது கூடப்போன 'ஈழநாடு' பத்திரிகையாளர்எழுதியது.

ஈழநாடு மட்டுமல்ல எமது நாட்டின்பெரும்பாலான பொதுசனத் தொடர்புச் சாதனங்களும் இப்படித்தான் இயங்குகின்றன.

— கே. பி. கே

முன் அறிவிப்பு

அமரர்
கைலாசபதி
நினைவாக...
வருடம் தோறும்
மாருதம்
நடத்தும்

சிறுகதைப் போட்டி

விபரம்
அடுத்த இதழில்...

கடித இலக்கியம்

உலக கம்யூனிச இலக்கியத்தின் மூலவர் கார்ல் மார்க்ஸ் தன் மனைவி ஜென்னிக்கு எழுதிய கடிதங்கள் அமரத்துவம் பெற்றவை. விசுவாசம் மிக்க வாழ்க்கைத் துணையாகவும், உற்ற தோழராகவும் தன்னை மார்க்சின் புரட்சி வாழ்க்கைக்கு அர்ப்பணித்தவர் ஜென்னி.

1856ம் ஆண்டு ஜூன் 21ம் நாள் மார்க்ஸ் ஜென்னிக்கு எழுதிய கடிதம் இது.....

ஜென்னி கண்மணி

ஜென்னி! கண்மணி,

நான்உனக்கு மீண்டும் எழுதுகிறேன். தனிமை என்னை மீண்டும் எழுத வைக்கிறது. எனது எண்ணங்களை உன்னிடம் எப்படி பேசவைப்பது?என் எண்ணங்களை நீ அறிந்துகொள்ளுமுன்பே, உன்னால் எப்படி விடையளிக்க முடியும்! நீ அனுப்பியுள்ள உன்துபடம் எவ்வளவு மோசமாக இருந்தாலும் அது எனக்கு மிகுந்த பயனுடையதே.

எழில்மிக்க ஓவியங்களைக் காட்டிலும், "சோகமிக்க மதனு" அந்த கன்னிமாதாவின் விகாரப்பட்ட சித்திரங்கள்கூட ஈடுபாடு மிக்க ரசிகர்களைப் பெறமுடியுமானால் உன் ஓவியத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. எவ்வாறுயினும் இரக்கமிக்க கன்னி மரியாளின் ஓவியங்களைத் தூங்கு தடையின்றி முத்தமிட்டிருக்க மாட்டார்கள். உன் புகைப்படத்தைப் போன்று இவை மெச்சத்தக்கவையுமல்ல; அந்த ஓவியங்களைப் போல் இரக்கத்துக்கு உரியவைகளாக இல்லாவிட்டாலும் உனது படத்தில் உன் முகம் கோபத்துடன் தோற்றமளிக்கிறது.

உன் எழில்மிக்க வதனத்தை, இனிமையான முகத்தை, முத்தமிடுவதற்கே உரிய உன் முகத்தை அநியாயப்படுத்திவிட்டார்கள். சூரிய ஒளிக்கதிர்களால் குறைபாடுகளுடன் பதிவாகியுள்ள உனது உருவை என் கண்களால்- இரவு விளக்கொளியாலும், சுருட்டுப் புகையினாலும் பழுதுபட்ட என் கண்களால்- எழில் ஓவியமாகத் தீட்டி ரசிக்க முடியும். கனவுகளில் மட்டுமல்ல; நான் உலவும் நேரங்களிலும்கூட கண்டுகளிக்க முடியும். பொய்யான போலி உலகம், மக்களைப்பற்றி கற்பனையான மேற்பூச்சான பிரதிபலிப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாக்குவது போலவே, என் எதிரில் நீ உயிர்த்துடிப்புடன் நிற்பதுபோல் என்னுல் கண்டுகளிக்க முடிகிறது.

என்னை அவதூறு செய்பவர்களும், தொடர்ந்து சுற்றித்திரியும் விரோதிகளும் இரண்டாந்தரமான ஒரு நாடகக் கொட்டகையின் முதல்தரமான காதல் நடிகன் என்று என்னைத் தூற்றியுள்ளனர். ஆனுல் இது அப்படித்தான் இருக்கிறது.

இந்த அயோக்கியர்களுக்குச் சற்றேனும் நகைச்சுவை ஞானம் இருந்திருக்குமேயாளுல், ஒருபடத்தில், 'உற்பத்தியும் உறவு மாற்றமும்' என்பதை ஓவியமாகத் தீட்டியும், மற்ருெரு படத்தில் நான் உன் காலடியில் கிடப்பதுபோன்ற ஓவியம் தீட்டி, இந்த இரண்டு ஓவியங்களையும் பாருங்கள் என்று தலைப்பிட்டு வைத்திருக்கவேண்டும். ஆனுல் இந்த அயோக்கியர்கள், அறிவற்றவர்கள், நகைச்சுவையுணர்வு அற்றவர்கள், என்றும் முட்டாள்களாகவே இருப்பார்கள்.

தற்காலிகமாகப் பிரிந்திருத்தல் உதவிகரமானதே. ஏனெனில் நிலைத்து நிற்கும் தொடர்பு ஒருவித சலிப்பை உண்டாக்கும்; மேலும் மனுேநிலைகளில் ஏற்படும் உணர்வுகளை மழுங்கடிக்கும்.

மாபெரும்சிகரங்கள்கூட அருகாமையில் நின்று பார்க்கும் பொழுது மிக உயரமாகத் தோன்றுவதில்லை. ஆனுல்அன்ருடவாழ்க்கையில் தீர்வுக்காக எதிர்ப்படும் சின்னஞ்சிறிய நிகழ்ச்சிகள் பூதாகரமான அளவில் நம்முன் விஸ்வரூபம் எடுக்கின்றன. பாசஉணர்வு இந்தவகையைச் சார்ந்ததே.

நேரடியாக நம்மிடையே ஏற்பட்ட பழக்கங்கள், அத்தகைய பழக்கங்களுடன் தொடர்பு கொண்ட பொருள் நம்முடைய நேரடிப் பார்வையிலிருந்து நீங்கியபின். அப்பொருளுடன் கூடி நின்ற பழக்கமே பாசமாக மாறிவிடுகிறது. இந்தப் பழக்கத்துடன் தொடர்பு கொண்டவனை அந்த பாசம் முழுமையாக ஆக்கிரமித்துக்கொள்கிறது. காதல் நெருக்கத்தின் காரணமாகப் பாசத்தின் பேருணர்வு தொலைதூரத்தின் மாயாஜால செல்வாக்கால் சிறுபழங்களாக வளர்கிறது.

உன்னை என்னிடமிருந்து பிரிக்க வேண்டுமெனில், எளிய கனவினுல் மட்டுமே பிரிக்க முடியும். காலப்போக்கில் மழையும், வெப்பமும் தாவர வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றதோ, அதே போன்றுதான் என் பாச உணர்வும் வளர்க்கப்படுகிறது.

என்னிடமிருந்து நீ பிரிந்திருக்கிறபொழுது உன்மீது இருக்கும் என் காதல் முன்னிலும் பன்மடங்கு பெருக்கெடுத்து இதயத் துடிப்போடு ஒன்றிப் பேருருவாய் நிற்கிறது; மீண்டும் வலிமையான பாசத்தின் அனுபவமிக்க முழு மனிதனுக வாழுகிறேன்.

நாம் வளர்க்கப்பட்ட விதத்திலும், பெற்ற கல்வியின் பயனுலும் அடைந்துள்ள விரிவான, அறிவு வயப்பட்ட தயக்க மிகுதியால், தன் உணர்வுகளாலும் ஏதார்த்தத்தின் விளைவாலும் ஏற்படும் பிரதிபலிப்புகளை கேள்விக்கு ஆட்படுத்தி, நாம் எவ்வளவு பலவீனமான, கோமாளித்தனமான தயக்கம் நிறைந்தவர்கள் என்பதை நிரூபித்துக் கொள்கிறுேம்.

என் இனியவளே, என் இதயமே. இப்படி நான் எழுதுவதைக் கண்டு நீ சிரிப்பாய். நம் இருவரின் இதயமும் ஒன்றையொன்று நெருங்கி இணைந்து தழுவ இயலுமா? நான் என்ன சொல்ல முடியும்? மௌனியாகிறேன்.

உலகத்தில் இல்லாத பெண்களா? அவர்களில் சிலர் பேரழகிகளாகவும் இருக்கக்கூடும். என்ருலும், என் வாழ்வின் அடித்தளத்தில் புதைந்துகிடக்கும் இனிய நினைவுகளையெல்லாம் மீண்டும் நினைவுறச் செய்யும் உன் வதன அசைவுகளை, நளினரேகைகளை நான் வேறு எந்த முகத்தில் காண முடியும்?

*ஈடுசெய்ய முடியாத என் நஷ்டத்தை, அந்த சோகத்தின் சாயலையும் உன் இனிய முகத்தில் காணமுடிகிறது. உன்னை முத்தமிட்டே என்வேதனையைக்குறைத்துக் கொள்கிறேன். 'அவளது அணைப்பில் புதையுண்டு, அவளால் முத்தமிடப்பட்டு மீண்டும் துயில் எழுதல்'-ஆம்; பிராமணர்கள் பித்தகோரஸ் ஆகியோரின் மறுபிறவிதத்துவ உபதேசத்தின் மூலமாகவும் கிறிஸ்த்துவ உயிர்த்தெழுதல் போதனைகளின் மூலமாகவும் உன் கரங்களின் அரவணைப்பும், உனது முத்தங்களும் எனக்கு நிரந்தரமாகக் கிடைக்குமானுல் நான் இந்த போதனையாளர்களின் பின்னே மகிழ்ச்சியுடன் ஓடிவிடுவேன்..

இனியவளே! என் கண்மணியே, உனக்கும் குழந்தைகளுக்கும் என் ஆயிரமாயிரம் முத்தங்கள்.'

* மார்க்ஸ் தனது 'மகனின் மரணத்தைக் குறிப்பிடுகிறுர்'

காந்தி-திரைப்படம்

இந்தியா சுதந்திரம் அடைந்து 36 ஆண்டு சாலமாகியும். அரை நில பிரபுத்துவ முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளினுல், நாடெங்கும் வேலை இல்லா திண்டாட்டம், உடுக்க உடை, இருக்க இடம், உழைப்புக்கேற்ற கூலி போன்றவை கிடையாததால் போராட்ட உணர்வு தலைதூக்குகிறது. பாட்டாளிகள் போராட தயாராகிக் கொண்டிருக்கிருர்கள் இவர்கள் போராட்டத்தை, இந்தியர்களாகிய நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம். நாம் சுதந்திர நாட்டில் வாழ்வதால் நமக்கு எல்லாம் கிடைக்கும் என்ற ஒரு மாயையை, முதலாளித்துவ அமைப்பை கட்டிக்காக்கும் சாதனங்களில் ஒன்ருன சினிமாவின் மூலம்' உருவாக்கி, இன்னெுரு சாதனமான பத்திரிகைகளின் மூலம் விளம்பரப்படுத்தி உழைக்கும் வர்க்கமான பாட்டாளிகளின் போராட்டத்தை, எண்ணத்தை மழுங்கடிக்கும் முயற்சியே இக் காந்தி திரைப்படம்.

— நன்றி: நூதன விடியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கியாறும் பேரினவாதமும்

வழுக்கி ஆறே —
எங்கள் வரலாற்று நிதியமே!
மல்வத்து ஓயா போல்
நீண்ட வரலாற்றுத் தேட்டம்
உன் இனிய கால்களின் கீழே
மினுங்கிக் கிடக்கிறது —

கட்டவிழ்த்து விட்ட
பேரினவாதச் சகதியில்
உன் முகம் மூடிக்கிடக்கிறது —

பல்லாண்டு பல்லாண்டாய்
தனிச் சொத்து வளர்ந்து
உன் அழகுக் கரையெல்லாம்
யார் யாரோ பிய்த்தெடுக்க
ஓடுங்கி உடல் சுருங்கி
குப்புறக் கிடக்கின்ருய் —

மேனுட்டார் ஏகாதிபத்தியச்
சிலம்படியைத் தீட்டுகையில்
உன்னழகுக் கண்ணுடி நீருற்றிற்
செங்குருதி சிந்தியது.

உறுதி எழுதிக் கொடுத்தாற்போல்
சுதந்திரக் கடதாசிக்
கொடியேற்றம் நிகழ்ந்தது —

பேரினவாதச் சேறு
பொங்கி எழுந்து வந்தாலும்
இந்தத் தியாக பூமியின்
இதய நீர் ஊற்றே —

நீநடந்த பாதையெல்லாம்
இந்தக் கோட்டை வெளியின்
இரத்த நாளங்களாய்த் தெரிகிறது.

— சபா. ஜெயராசா

வடஇலங்கை மேதின மேடைகளில்

— எமது நிருபர்கள்

ஃ சிக்காக்கோ நகரில் எட்டு மணிநேர வேலைகோரி போராட்டம் நடத்திய நூறுபேர் சுட்டுக்கொல்லப்பட்ட தினமாகிய மேதினத்தை ஆடம்பரமாகவும் திருவிழாவாகவும் கொண்டாடும் முதலாளித்துவக் கட்சிகள் உழைக்கும் வர்க்கம் தொலைந்தது என்ற சந்தோசத்திலேயே இவ்வாறு செய்கின்றன. — பொன்.குமாரசாமி(கம்யூ கட்சி)

ஃ இன்றைய மக்கள் சொல்லொணுத துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருவதால் இந்த ஆட்சியை மாற்றுவதுதான் தொழிலாளர் வர்க்கத்தின் முக்கிய குறிக்கோளாகும். — கே. செந்திவேல் (கம்யூ இ)

ஃ மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. ஆட்சியைமாற்ற உறுதியேற்போம். — கு.விநோதன் (சு.கட்சி)

— கூட்டு மேதினக் கூட்டத்தில்

ஃ விவசாயிகளை ஓர் அமைப்பின் கீழ் அணி திரட்டுவதன் மூலம் மட்டுமே தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். நகரங்களில் வெறும் களியாட்டங்களாக மேதினத்தைக் கொண்டாடுவதைவிட கிளிநொச்சி போன்ற விவசாயப் பிரதேசத்தில் கொண்டாடுவது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. — விசுவமடு தர்மலிங்கம்

— தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி கூட்டத்தில்

ஃ மேதினத்தை தமிழ் தேசியத் திருநாளாகக் கொண்டாடுவோம். — வ. பொன்னம்பலம்

— தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டத்தில்

ஃ இந்த நாட்டில் உடல் உழைப்பாலும் மூளை உழைப்பாலும் கூடிய பங்கைச் செலுத்தும் தமிழ்மக்கள் தான் நசுக்கப்பட்டு ஒடுக்கப்படுகிருர்கள். பல இம்சைக்குள்ளாக்கப்படும் எமது இனம் எமது இலட்சியம் கைகூடும்வரை கட்டுப்பாட்டுடனும் உறுதிகுலையாமலும் செயல்பட இத்தினத்தில் உறுதிகொள்ள வேண்டும்.

— அ. அமிர்தலிங்கம்

— அ. தி. மு. க இலங்கைக்கிளை கூட்டத்தில்

ஃ இந்நாளில் பல வகைகளிலும் அடக்கி ஒடுக்கப்படும் தமிழினம் தனக்கென ஒரு சரியான பாதையினை வகுக்கவேண்டும். — மு. டேவிற்சன்

— ஈழமக்கள் விடுதலை முன்னணி கூட்டத்தில்

ஃ தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு முதலாளித்துவக்கட்சி. அது தமிழ் முதலாளிகளின் நல்வாழ்வுக்காகவே செயல்படும். அது சிங்கள முதலாளித்துவ அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அதனுல் தமிழ்மக்களுடைய விடுதலைக்குத் தலைமைதாங்க முடியாது.

— ஜனுப் எம் ஏ. சி. இக்பால்

— கம்யூ. கட்சி (மா.ஓ) கூட்டத்தில்

ஃ வேலை இழந்த பல்லாயிரக் கணக்கானோர் ஒரு புறமிருக்க தொழிற்சாலைகளில் புதிதாகப் பலர் இடைநிறுத்தம் செய்யப்பட்டு வருகிருர்கள்.

— ஜீ. டி. சுமணதாச

— நவலங்கா சமசமாஜக் கட்சி கூட்டத்தில்

ஃ அடுத்த மேதினம் தமிழீழத்தில் என்றுகூறியே நான்கு மேதினங்கள் போய்விட்டது. கூட்டணியினர் ஒரு அங்குலம்கூட நகரவில்லை. — குமார் பொன்னம்பலம்

— தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைச் சம்பளமல்ல தகுந்த சன்மானம் தேவை!

— மல்லிகை ஜூலை 1967
ஆசிரியத் தலையங்கத்திலிருந்து...

ஒரு இலக்கிய சிருஷ்டிக்குக் கொடுக்கப்படும் கௌரவம், மதிப்பு, ஆதரவு ஆகியவைகளினால்தான் இன்னும்உயர்ந்ததைஆக்க படைப்பாளிக்கு உற்சாகம்ஏற்படமுடியும் அதனால் அதைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளும் கலை இலக்கிய ரசிகர்கள் மத்தியில் ஒரு ஸ்தானத்தையும் பெற இயலும். காலப் போக்கில் சர்வதேசப் புகழ்பெறும் அந்த் அந்தச் சிருஷ்டியாளருடன் சேர்ந்து அவ்வக் கதைகளைப் பிரசுரித்த பத்திரிகைகளும் பிரபலம் பெற்று திகழும். ஆனால் நடைமுறையில் நாம் காண்பதென்ன? அதே பத்திரிகையில் நிருபர் எழுதும் செய்தியின் மதிப்பைவிட,ஈழத்துச் சிருஷ்டிஎழுத்தாளனின் தரமான படைப்பு அவர்களது பொருளாதாரக் கணிப்பீட்டின்படி விலை மலிவானதெனக் கணக்குப் பண்ணப்பட்டால், எப்படி ஈழத்தில் தரமான படைப்புக்கள் சிருஷ்டிக்கப்பட முடியும்? இது சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு மாத்திரமல்ல, நமது நாட்டுக்கே மிகப்பெரிய நஷ்டம் என்பதை இன்றில்லாவிட்டாலும் எப்போதோ ஒருநாள் உணருவார்கள் என்பதை இன்றே சொல்லி வைக்க விரும்புகிறோம்.

'இலங்கையில் மிக அதிகம் விற்பனையாகும் பத்திரிகை இதுவேயாகும்' எனத் தங்களது பத்திரிகை விற்பனவுப் பெருக்கத்தை அடைப்பு வார்த்தைகளுக்குள்ளே அடக்கி விளம்பரமாக வெளியிடும் பத்திரிகைகளின் பெருமையில் இந்நாட்டுஎழுத்தாளர்களுக்கும்நிறையப் பங்குண்டு என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். 'நமது நாட்டுப் பத்திரிகைகளை வாங்குங்கள். எங்கள் நாட்டுக் கலை இலக்கியங்களை ஆதரியுங்கள்' என்று மேடை மேடையாகத் தொண்டைத் தண்ணீர் வற்றக் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகக் கத்தித் திரிந்தவன் ஈழத்து எழுத்தாளன். இந்த விற்பனை உயர்வில் அவனுக்கு நியாயமான பங்கு நிறையஉண்டென்பதை நீதி உள்ளம் படைத்தவர்கள் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

முடிவாக இந்த நாட்டு எழுத்தாளன் சற்றுத் துணிச்சல் காட்ட வேண்டும். தனது கடமையைச் செய்யும் தொழிலாளி உரிமையை தட்டிக்கேட்டுப் பெற்றுக் கொள்கின்றான். அந்த முதுகெலும்புத்துணிவு ஈழத்து எழுத்தாளனுக்கு இல்லையா என்பதைக் காலம்தான்கூற வேண்டும் ஒரு டாக்டரை ஒரு டாக்டர் காட்டிக் கொடுக்கமாட்டான் அப்படியே ஒரு அப்புக்காத்தை ஒரு அப்புக்காத்தும் காட்டிக் கொடுக்கமாட்டான். அதே போல என்ன அபிப்பிராய வித்தியாசங்களிருந்தாலும் ஒரு எழுத்தாளனை இன்னுமொரு எழுத்தாளன் காட்டிக்கொடுக்கக்கூடாது எனச் சபதமேற்கவேண்டும். 500ரூபாய் வேண்டாம்: 150ம் வேண்டாம். பிரசுரிக்கும் சிறுகதை ஒவ்வொன்றிற்கும் 50 ரூபாய் தந்தாலே எழுதுவோம் எனத் தீர்க்கமாக முடிவெடுக்க வேண்டும். மீறிப் பிரசுரத்துக்கு அனுப்புவோர் வளர்ந்துவரும் ஈழ இலக்கியத்தின் துரோகிகள் என்று முத்திரைகுத்தப்பட்டு தூக்கிவீசப் படுவார்கள் என்பதும் திண்ணம்.

பச்சைத்தண்ணீரில் பலகாரத்தை எத்தனை நாட்கள் வெற்றிகரமாகச் சுடுவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான்பார்க்கலாம்.

O பதினாறு வருடங்களுக்கு முன்பு மல்லிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் இந்நாட்டு எழுத்தாளர்கள் அனைவரினதும் மனப் பிரதிபலிப்பாக கொடுத்த குரல் இது. இன்றும்கூட அதே 50 ரூபாய் கேட்டுக் குரல் கொடுக்கவேண்டிய நிலை. இத்தனைக்கும் பத்திரிகைகளினது விலையும், வாழ்க்கைச் செலவும் இரண்டாயிரம் நூற்றுவீதம் உயர்ந்துள்ளது இது இந்நாட்டு சிருஷ்டிஎழுத்தாளர்கள் அனைவருக்குமட்டுமல்ல தேசிய இலக்கியத்துக்கே செய்யப்படுகின்ற மோசமான துரோகமாகும்.

பி.கு: வீரகேசரி மட்டும் ஐம்பது ரூபாய் ஆக்கியிருக்கிறது. ம் இது மட்டுமாவது... இப்போதாவது... இம் மட்டுமாவது!

— **சாளரன்**

அவர்கள் போரிடுவார்கள்

கொடுமைக்கும் கொள்ளைக்கும் ஆளாகி, கண்ணீரும் கம்பலையுமாய்க் கதறும் ஏழை எளியவர்களின் விடுதலைக்காக— ஆண் சிங்கங்களும் வீராங்கனைகளும் துளிக்கூட கவலை கொள்ளாமல் தங்கள் வாழ்வை எப்போது அர்ப்பணம் செய்ய முன் வருகிறார்களோ அதுதான் சுதந்திரத்தின் உதயகாலம்.

அவர்கள் கொடுமைப் படுத்துகிறவர்களோடும், கொள்ளை அடிப்பவர்களோடும் உண்மையும் உத்வேகமும் கொண்டு போரிடுவார்கள். அது மனித வர்க்கத்தின் கழுத்திலிருந்து நுகத்தடியை இறக்குவதற்காகவும், உலகில் அமைதியையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டுவதற்காகவும்தான்.

— **மாவீரன் பகவத்சிங்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைகள்

எங்களுடைய பிரதான இலட்சியம் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சந்தோசத்தையும் சுபீட்சத்தையும் உண்டாக்குவதேயாகும்.

— பிரதமர்

அதனுற்தான் 80 ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக இருபதாயிரத்துக் குமதிகமானேரை நிர்க்கதியாக நடுறேட்டில்விட்டுள்ளீர்கள் போலும்.

அடக்கப்பட்ட இனத்திடமிருந்து விடுதலைக் குரல் எழுவது நியாயமானதே. அதனிடமிருந்து வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

வ. பொன்னம்பலம்

வாக்குகளை எதிர்பார்க்கலாம் என்கிறுர்களே உங்கள் சகாக்கள்.

வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதும் மீண்டும் ஹொலிவூட்டினுள் பிரவேசிக்கப் போகிறேன்.

— அமெரிக்க ரீகன்

எம். ஜி. ஆரிடம் அந்தப் பேச்சே வேண்டாம் என்கின்றுர் ஒருசினிமா நலன்விரும்பி

தமிழீழம் பெறும்வரை தேர்தலில் பங்குபற்ருது தமிழீழ விடுதலை அணி

— முக்கியஸ்தர் பேச்சு

அது சரி இவர்களும் எப்போதும் தேர்தலைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறுர்களே... பங்குபற்ற மாட்டோமென்றுதான்.

கடந்த காலங்களில் கூட்டணி சாதித்தது என்ன? நல்லூரர் எம். பீ விளக்கம்

விளக்குகிறுரா அல்லது தன்னைத்தானேவினவுகிறுரா

உள்ளூராட்சி அதிகாரங்களை நாம் இழந்தால் விடுதலை வேகம் தடைப்பட்டுவிடும்.

— அமிர்தலிங்கம்

அசையாத ஒன்றுக்கு அது என்ன வேகம்?

இலங்கை ஜனுதிபதியின் யோசனையை இந்திரா நிராகரிக்கவில்லை.

— இந்தியத் தூதுவர்

ஏற்கவும் இல்லைத்தானே

சமுதாயம் இருண்டிருக்கிறது. எங்கும் எதிலும் இருள் தான்.

— ஈழத்துச்சிவானந்தன்

பழம் புலவரே வாழும் சமூகம் உயிர்த் துடிப்போடு தான் இருக்கிறது. உங்கள் பார்வையில்தான் இருள். ஒளிமிக்க எதிர்காலத்தில் உங்கள் ஸ்தானம்தான் இருளானது

— **காண்டீபன்**

தெறிப்புகள் | ள்கபுற்றிதபெ

வந்த மடல்களில் வகைக்குச் சில....

மாருதம் கண்டேன். திருப்தி தருகிறது. உங்கள் முயற்சிகள் பயனளிக்கும்.

— கே எஸ். சிவகுமாரன்
கொழும்பு - 6

மாருதம் வரண்டு கிடக்கும் இலக்கிய உலகிற்கு வரப்பிரசாதமாக அமையும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

— சோலைக்கிளி
கல்முனை - 4

தங்கள் வெளியீடு மாருதம் கிழக் கிலங்கையிலும் விற்பனையாவது கண்டு மகிழ்ச்சி. நீங்கள் எப்போதோ சஞ்சிகை வெளியிட வேண்டியவர். முயற்சி திருவினையாக்கும்.

— எஸ். எம். எம். ருபீக்
சாய்ந்தமருது

புதிய எழுத்தாளர்களினது ஆக்கங்களில் குறை இருப்பினும் நிவர்த்தி செய்து பிரசுரித்து இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துங்கள்

- வீ. ஆர். தங்கவேல்
வத்தளை

மாருதம் அட்டையில் பொதி சுமந்து வரும் நிலையிலுள்ள சலவைத் தொழிலாளியைப் போட்டிருப்பதைசாதிவெறி கொண்ட தலைவர்கள் கல்விமான்கள் கூடுதலாக உள்ள யாழ்ப்பாணம் வாவேற்குமா உங்கள் துணிச்சலைப்பாராட்டுகின்றேன்.

— டொமினிக்மனேகரன்
திருக்கோணமலை

மாருதம் நன்றாக இருப்பதாக நண்பர்கள் கூறினுர்கள். என் கருத்தும் அதுவே.

— கொ.மா. கோதண்டம்
தமிழ்நாடு

முல்லையூரான் புதிய சுவடுகளைப் பதிக்கிறுர். ஊனப் பார்வைகள் தரமாக உள்ளது. சமரில் அவருடையமுத்திரை பதியவில்லை. அட்டைப்படம் உங்கள் துணிச்சலைக் காட்டுகிறது.

— எம். எம், நௌஷாத்
யாழ் / பல்கலைக்கழகம்

மாருதம் இது முதலாவது இதழா! எழுத்தாள நண்பர்களும் ஆச்சரியப் பட்டனர். மாருதம் அரும் பெரும் சாதனைகளைச்செய்யும்என்பதற்கு முதல் இதழே சான்று.

— எம். சம்பந்தன்
மலேசியா

எடுத்த எடுப்பிலேயே மாருதம் என்னை கவர்ந்துவிட்டது மேத்தாவின் பாராட்டைப் பெற்ற ரோகிணியின் கவிதை சிறந்த படைப்பு. மேன் மேலும் நல்ல படைப்புகள் இடம்பெற்று சஞ்சிகை வளர வாழ்த்துகின்றேன்.

— திருமதி செ. சந்திரவதனு
பருத்தித்துறை

மாருதம் அமைப்பும் உள்ளடக்கமும் நன்றாக இருந்தன.

— அன்பு ஜவகர்ஷா
மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் எங்கள் மாருதம்

குறுகிய கால ''தீவிர'' வளர்ச்சியில் ஈழத்து இலக்கிய உலகில் பிரபல்யம் பெற்ற காவலூர் எஸ். ஜெகநாதனை கௌரவ ஆசிரியராகவும் கே. பி. காண்டீபனை ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்துள்ளது. ''மாருதம்'' முதலாவது இதழ்.

உழைத்து வாழும் தொழிலாளி ஒருவரின் படத்தை அட்டையில் பிரசுரித்து 32 பக்கங்களில் அழகிய அமைப்புடன் வெளியாகியுள்ளமாருதம் தனது இலக்கியப்பணியை ''வேள்வி'' என்றே குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வேள்வியில் எத்தனை பேருக்கு என்னென்ன நிகழும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

''மாருதம்'' தன் கருத்துக்களை இவ்வாறு தெரிவிக்கிறது. எப்படி?

எமக்கென்று ஒரு தனித்துவமான பாதையில் மாருதம் நடைபோடும். நிச்சயமாக அது தனியான பாதை அல்ல.

சவால்களையும், சபதங்களையும் நாங்கள் வாயால் விடுக்க விரும்புவதில்லை. செயலால் சாதிக்கவே விரும்புகிறோம்.

விதை இட்டுள்ளோம் விருட்சமாவது நிச்சயம். ஏனென்றால் நாங்கள் உரமாகத் தயார். நீங்கள் பாதுகாப்பீர்கள்—என்று வாசகர்களுக்கு இல்லை இலக்கியக்காரர்களுக்குத் தெரிவிக்கிறது மாருதம்.

— வீரகேசரி 10-4-83

''மாருதம்'' என்ற சஞ்சிகை காவலூர் எஸ். ஜெகநாதனைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணம் எஸ் ஜே (எஸ். ஜெகநாதன் தான்) பதிப்பகத்தின் வெளியீடாக மொத்தம் முப்பத்திரண்டு பக்கங்களுடன் இது வெளியாகியுள்ளது.

அட்டைப்படத்தில் மூட்டை காவிய வண்ணம் ஒரு சலவைத் தொழிலாளியின் படம். என்ன நோக்கத்துடன் இது பிரசுரமாகியுள்ளது என்று உள்ளே எங்கும் தெரிவிக்கப்படவில்லை.

ஆங்காங்கே பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியான பல ஆக்கங்களும் மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஒன்றிரண்டு புதியவைகளைத் தவிர.

குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விளம்பரம் (?) ஒன்றும் பதினைந்தாம் பக்கத்தில் காணப்படுகின்றது. மாருதம் வெளியீட்டாளர்களின் முகவரியுடன் பிரசுரமாகியுள்ள இந்த விளம்பரத்தில் 'எங்களிடம் வாருங்கள், நர்மதாவின் நல்ல நூல்களை நாங்கள் வழங்குகிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வெளியான எத்தனையோ நல்ல நூல்கள் விற்பனைச் சந்தையின்றித் தவித்துக் கொண்டிருக்கின்றன, தமிழ் நாட்டிலிருந்து வேறுபல புத்தகாலய நூல்களும் இங்கு இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் நர்மதாவின் புத்தகங்களை விற்பனை செய்யவென எடுத்திருக்கும் முயற்சி எமக்குப் பழைய சங்கதிகளை நினைவூட்டச் செய்கின்றதே. ''செஞ்சோற்றுக் கடன்'' கவும் இருக்கலாம்.

அடுத்தது—

அசுர எழுத்தாளர் காவலூர் ஜெகநாதன் பெருந்தொகையான சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றவர் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

ஆனால் அவர் பரிசு பெற்ற சிறுகதைகளைப் படிக்கும் சந்தர்ப்பமோ வாசகர்களுக்குக் கிடைத்ததில்லை. இதனை ஒரு பெருங்குறையாகவே வாசகர்கள் கருதுகிறார்கள்.

எனவே, தனது பரிசுபெற்ற ஒவ்வொரு சிறு கதையையும், மாருதத்தின் ஒவ்வோர் இதழிலும் ஒவ்வொன்றாக ''அசுர எழுத்தாளர்'' பிரசுரிப்பாரானால், அதனை வாசகர்கள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்கள் அல்லவா?

— தினகரன் 17 4-83

தமிழுக்கு வளம் சேர்க்கும்

நர்மதாவின் நல்ல நூல்கள்

சிறந்த நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள்
கவிதைத் தொகுப்புகள், அறிவியல் நூல்கள்
அனைத்தும்
அழகும் தரமும் இணைந்த வெளியீடுகள்
தேர்ந்த வாசகர்களை வரவேற்கிறோம்.

எஸ். ஜே. புத்தக நிலையம்

பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

துணிச்சல்.... ஒரு விளக்கம்

சென்ற இதழ் அட்டையில் சலவைத் தொழிலாளி ஒருவரின் படத்தினை வெளியிட்டிருந்தோம் ''அந்த துணிச்சலைப்பாராட்டுகிறோம்'' என்று ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. பெரும்பாலானவை யாழ் குடாநாட்டிற்கு வெளியேயிருந்து வந்தவை. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை அட்டையில் போடுவதென்பது மாபெரும் எதிர்ப்பைச் சம்பாதிக்கிற ஒரு காரியமல்ல இன்றைய யாழ்ப்பாணத்தில். வெளியிடத்தைச் சேர்த்தவர்கள் கால் நூற்றாண்டுக்கு முந்தியே இன்னமும் பார்க்கிறார்கள்.

தவிரவும், சலவைத் தொழிலாளியை அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக நாம் பிரசுரிக்கவில்லை. அவ்வாறெனில் அச்சமூகத்தைச் சேர்ந்த பெரு முதலாளியொருவரின் படத்தைப் போட்டுக் குளிர்காய்ந்திருக்கலாமல்லவா?

இங்கு நாம் தொழிலாளியை கௌரவிக்கும் நோக்கிலேயே செயல்பட்டோம். வர்க்கத்திற்கு மேலாக சாதியை தூக்கிப்பிடிக்கிற பிற்போக்குத்தனத்தின் சகல அம்சங்களையும் நிராகரிப்பவர்கள் நாம். எனவே தவறான அனுமானத்தின் மீதுகிடைத்த 'துணிச்சலுக்கான பாராட்டுக்களை' எம்மால் ஏற்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியடி புளியடி!

எவ்விடம்?
எவ்விடம்?
புளியடி!
புளியடி!
எங்கள் கண்களைப்
பொத்தியோர்
நண்பர்கள் தானே?
ஓமோம்!
ஓமோம்!
சரி சரி
சரி சரி
எவ்விடம்?
எவ்விடம்?
தேர்தலடி
தேர்தலடி
எங்கள் கண்களைப்
பொத்தியோர்
யாரோ எவரோ?
உங்கள் மீட்பர்கள்
உங்கள் அன்பர்கள்
சரி சரி
சரி சரி
போடுங்கள் புள்ளடி
எருமைக்கு நேரே
போட்டோம் புள்ளடி
எருமைக்கு நேரே
எவ்விடம்?
எவ்விடம்?
தேர்தலடி!
தேர்தலடி!

எங்கள் கண்களைப்
பொத்தியோர்
யாரோ எவரோ?
உங்கள் இரட்சகர்
உங்கள் நேசகர்
சரி சரி
சரி சரி
போடுங்கள் புள்ளடி
கழுதைக்கு நேரே
போட்டோம் புள்ளடி
கழுதைக்கு நேரே
எவ்விடம்?
எவ்விடம்?
புளியடி
புளியடி
இதென்ன ஆட்டம்
புதிதாயிருக்கே?
புளியைச் சுற்றியே
வட்டம் போட்டுச்
சுற்றி வருகிறோம்
ஆட்டம் புதிதில்லை
பழையதே பழையதே
கண்ணைப் பொத்தி
ஆடும் ஆட்டமே
பெயர்தான் புதிது
அதென்ன தெரியுமோ
தெரியும் தெரியும்
'கண்கட்டி வித்தை'
இல்லை இல்லை
'சனநாயகம்'
'சனநாயகம்'

யோ. பெனடிக்ற்பாலன்

பொதுப்படையான சித்தரிப்பும் தனித்துவமான கவர்ச்சியும்

— கார்த்திகேசு சிவத்தம்பி

முன் கூறிய இரண்டு காரணிகளும் நவீன தமிழிலக்கியத்தின் இன்னொரு பண்பினை நிர்ணயஞ் செய்கின்றன. எழுத்தின் மட்டநிர்ணயம் வாசக மட்டத்தால் ஏற்படுத்தப்படுகிறது. ஆசிரியன் தனது வாசகர்கள் யார் என்பதை நிர்ணயஞ் செய்துகொண்டே எழுதும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நுகர்வுமுறைமை விநியோக முறைமையையும் உற்பத்தி (ஆக்க) முறைமையும் தீர்மானிக்கின்ற தன்மையினை நாம் இங்கு காணலாம். ''வாசக வட்டம்'' என்ற கோட்பாடு இதனாலேயே ஏற்படுகின்றது. உற்பத்தியாளனுக்கும், நுகர்வோனுக்குமிடையிலுள்ள நேரடியுறவு இல்லாத நிலைமையிலுங்கூட உற்பத்தியாளன் நுகர்வோனின் குணநலன்களை அறிந்து அதற்கேற்பத் தனது உற்பத்தியை ''நெறிப்படுத்தும்'' பண்பு இன்றைய எழுத்திற் காணப்படுகிறது. பாடப்புத்தக உற்பத்தி முதல், பாலியல் நாவல் உற்பத்தி வரை இப்பண்பு தொழிற்படுவதைக் காணலாம். பிரசுர நிறுவனங்கள் இப்பணியை ஒழுங்குபடுத்திக் கொடுக்கின்றன. இதனால் தமிழிலக்கியப் பாரம்பரியத்திற் சிலசுவையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழிற் பல நூல்கள், விளக்கவுரைகள் இல்லாது பயன்படுத்த முடியாதன. சோழப் பேரரசாட்சியின் பிற்கூற்றிலும், அதற்குப் பின்னரும் சில நூல்கள் தோன்றும் காலத்திலேயே உரையைப் பெறும் தன்மையை நாம் அவதானித்துள்ளோம். வாசக மட்ட நிர்ணயங் காரணமாக இந்நிலைமை மாறியுள்ளது. ஒருவர் எழுத்தை இன்னொருவர் எடுத்துக் கூறி எழுதும் புதியபுத்தகம் தோன்றத்தொடங்கிற்று.

வாசக மட்டம் என்னும் இக்கருது கோள் இலக்கியம் என்பது இன்று நுகர்வுப் பொருளாகிவிட்டது எனும் உண்மையைப் பறைசாற்றி நிற்கிறது. நுகர்வுப்பொருள் உற்பத்தி என்று கூறுவதில் தொக்கி நிற்கும் கருத்துக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்த்துணர்ந்து கொள்ளுதல் அத்தியாவசியமாகிறது. உற்பத்தியின் தரம், சந்தையின் நிலைமை விலை நிர்ணயத்தில் தரமும் சந்தையும் பெறுமிடம் என்பன முக்கிய இடம் பெறுவது இயல்பே. இலக்கியம் நுகர்வுப் பொருளாகிவிட்டது எனும்பொழுதே அதன் சந்தைக் கவர்ச்சி பற்றிச் சிந்தித்தல் அவசியமாகின்றது. தரம் எனும் அளவுகோலின் இரு முனைகளையும் விட்டு (அதாவது மிக உயர்ந்த தரத்தையும், மிக மலினப்படுத்தப்பட்ட நிலைமையையும் விட்டு) நோக்கும்பொழுது சராசரி நிலைப்பட்ட எழுத்துக்களின் தரம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டுவது அத்தியாவசியமாகிறது. ஏனெனில் பெருந்தொகையான எழுத்துக்கள் சராசரி மட்டத்தினவாகவேஇருக்கும். அத்துடன் இந்தப்பெருந்தொகை எழுத்து வெளியீடே தரத்தின் முதல் முனையான உயர்நிலைஎழுத்தின் பிரசுரத்தினையும் தாக்குப்பிடிப்பதாக விருத்தல் வேண்டியுள்ளது.

தொடர்கதையாகட்டும்!

உங்கள் மாருதத்தோடு
உறவு தொடர் கதையாகட்டும்

சந்தாதாரராகுங்கள்

ரூபா 15/-

6 இதழ்கள் தபாலில்
உங்களைத் தேடிவரும்

இதனை விளங்கிக் கொள்வதற்கு வாசகன் பற்றிய ஓர் உண்மையை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ''வாசிப்பு'' என்பது சொந்த நிலைப்பட்ட ஒரு தொழிற்பாடாகும். அதாவது சொந்த விருப்புத் தூண்டப்பட்ட நிலையிலேதான் ஒருவர் வாசிப்பார். ஆனால் பெருந்தொகை உற்பத்தி நடைபெறும் இன்றைய நிலையில் தனியொருவரின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ற வகையில் ஒரு பொருளை உற்பத்தி செய்து விட முடியாது. அத்தகைய ஒரு நிலை மத்திய காலத்தில் வினைஞர்களிடையே காணப்பட்டது. பிரபுத்துவத்திற்கேற்ப அவர்கள் உற்பத்தி செய்தனர். ஆனால் இன்றோ நுகர்வோர் வெகுசன நிலையினர் இந்த நிலையில் இலக்கிய வெளியீடு தன்னூட்டமுள்ளதும், அதற்கு மேற் சென்று லாபம் தரக்கூடியதுமான ஒரு பொருளாதார நடவடிக்கையாக அமைய வேண்டுமெனில் படைக்கப்பெறும் எழுத்து (இலக்கியம்) எல்லோரையும் சித்திரிக்கத்தக்க அளவுக்குப் பொதுமையான பிரச்சினைகளைப் பற்றி விவரிப்பதாகவும் அதேவேளையில் ஒவ்வொரு வாசகரையும் கவரத்தக்க அளவுக்கு தனிக்கவர்ச்சி யுடையதாகவுமிருத்தல் வேண்டும். பொதுப்படையான ஒருவிடயத்தைச்சித்தரித்து மனித நிலைப்படுத்தி விவரிக்கும் பொழுது அதில் வாசகர்கள் பாத்திர வகையாலோ, சம்பவ வகையாலோ தங்களை இனங்கண்டு கொள்ளத்தக்க அளவுக்குசொந்த நிலைக் கவர்ச்சியுடையதாகவும் இருத்தல் வேண்டும். வெகுசன இலக்கியத்தின் (mass literature) ஊற்றுக்காலே இதுதான். இதன் பிற அம்சங்கள்பற்றிப் பின்னரும் பார்ப்போம். ஆனால் இக்கட்டத்தில் நவீனஇலக்கியத்தின்இரண்டு பண்புகளைத் துல்லியப்படுத்துதல் போதுமானதாகும்.

முதலாவது, நவீன இலக்கியக் கவர்ச்சியும் ரசனையும் தனி நிலைப்பட்டதாகும். குழும நிலை (community) ரசனை இப்பொழுதில்லை. அச்சு முறைமையின் முக்கியமான பாதிப்பு இது குழுமநிலை ரசனை நாடகத்திலுண்டு.

இரண்டாவது, எழுதப்படுவது அதன் விடயச் சித்தரிப்பிற் பொதுப்படையாக இருக்கவேண்டிய அதே வேளையில் எவ்வொருவரையும் கவரத்தக்க தனித்துவமான கவர்க்சியுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

நவீன இலக்கியத்தின் இப்பண்பை அறியும் பொழுதுதான் சனரஞ்சக எழுத்து மட்டத்திற் சில எழுத்தாளர்களும், சிலவகைப்பட்ட எழுத்துக்களும் வாரசஞ்சிகைகளாலும், சனரஞ்சகப்பிரசுரகர்த்தாக்களாலும் விரும்பப்படுவதற்கான காரணம் புலப்படும் ஆனால் பொதுவான பிரச்சினைகளைத் தனிநிலைக் கவர்ச்சியுடைய வகையில் எழுத்தாக வடிக்கும் இத்தொழிற்றுறையில், விதந்து கூறப்படும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகள் அணுகப்படும்

தொலைந்துபோன நாட்களிலிருந்து.....

தெருவிலே எமது
தலைவிதி உள்ளதை
நெருப்பிலே எமது
நாட்கள் நகர்வதை
அனுமதிக்கிருயா?
'இல்லை ...'

— சேரன்

முறையும், அவற்றை எழுத்தாக வடிக்கும் ஆசிரியரும், மோஸ்தர்கள் மாறுவது போன்று மாறுவதுண்டு. 1940 முதல் 1980வரை தமிழ்ச்சஞ்சிகைகளில் ''கவர்ச்சி'' மிக்க தொடர்கதை எழுத்தாளர்களாக விருந்தவர்களையும், அவர்களின் தொடர்கதைகளின்கதைப் பொருளையும் பார்த்தால் இந்த மோஸ்தர் மாற்றத்தின் பண்பை அறிந்து கொள்ளலாம். பி. எம் கண்ணன், சங்கரராம், அகிலன், ஜானகிராமன், மஹரிஷி, நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன், சுஜாதா, மணியன், ராஜம்கிருஷ்ணன், இந்திரா பார்தசாரதி, சிவசங்கரி போன்றோரை உதாரணமாகக் கொள்ளலாம். அவரவர் உச்சநிலையிலிருந்த(இருக்கும்) நாட்களில் இவர்கள் ஒவ்வொருவரும் தம்மை முக்கிய இலக்கிய கர்த்தாக்களாகவே கருதியுள்ளனர். இவர்களுள் இலக்கிய கவனத்துக்கு உரியவர் யாவர் என்பது எமக்குத் தெரிந்ததே.

மேற்கூறிய ''பொதுப்படையான சித்தரிப்பு'' எனும் பண்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக நவீன இலக்கியத்தின் இன்னொரு அம்சம் ஏற்படுகிறது.

முன்னெக்காலத்திலுமில்லாத வகையில் வாசகர் தொகை அதிகரித்துள்ள இக்காலத்தில். வாசகரைக் கவரத்தக்க வகையிலமையும் "பொதுப்படையான சித்திரிப்பு" எனும் பொழுது, எழுத்திற் சித்தரிக்கப்படுவது சகல சமூக மட்டங்களுக்கும் பொதுவான பிரச்சினையாகவே இருக்கும் நிலைமை தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இலக்கியத்தின் சந்தைத் தேவையாகவிருக்கும் இந்தப் பண்பு, காத்திரமான சமூக சிந்தனை காரணமாகவும் இலக்கியத்தில் இடப்பெறுகின்றது. இலக்கியத்தில் சமூகப்பயன்பாடு பற்றிச் சிந்திக்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டே தமது ஆக்கங்களைப் படைப்பர். அந்தச் சமூகப் பிரச்சினைகளுக்குக் களமாக அமையும் சந்தர்ப்பமும், அப்பிரச்சினைகளை எடுத்துணர்த்துதற்குப் பயன்படுத்தும் பாத்திரங்களும் சமூகத்தில் அத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடிய வகைமாதிரியாக, வகைமாதிரியினராக (Social types) அமைவது தவிர்க்க முடியாததாகும். மனிதனின் சமூக இயைபுக்கு ஊறு விளைவிக்கும் தனிமனிதப் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் பொழுது அவற்றையே தம்முள் தாம் முடிந்த முடிபாகச் சித்தரித்தால் அத்தகைய கதாபாத்திரம் சமூக வகை மாதிரியாக அமையாது யதார்த்த நோக்குக்கு இது ஊறு விளைவிக்கும். இதுவரை கூறியது காத்திரமான இலக்கியங்களிற் காணப்படும் அம்சமாகும். ஆனால் சனரஞ்சக எழுத்துக்களில் இதேமாதிரியான வகைமாதிரிப் பாத்திரங்கள் சாதாரண வாசகர்களின் "கனவுப் பாத்திரங்களாக" வார்க்கப்படுவதுண்டு. ஹாரல்ட் ரொபின்ஸ் எனும் சனரஞ்சக நாவலாசிரியனின் பெண் பாத்திரங்களைக் குறிப்பிடும் பொழுது, விளம்பரங்களில் "நீங்கள் எப்படி இருக்கவேண்டுமென்று கனவு காண்கிறீர்களோ அப்படியான பாத்திரங்கள்" என்ற கருத்துப்படக் குறிப்பிடப்பட்டிருக்கும். சனரஞ்சக எழுத்தாளர்களின் ஆக்கத்திறன் இத்தகைய பாத்திரங்களைத் தோற்றுவிப்பதிலேயே தங்கியுள்ளது. எனவே இலக்கியத்தின் இரு மட்டங்களிலும் (காத்திர மட்டத்திலும், வெகுசனமட்டத்திலும்) பாத்திரங்களைச் சமூகவகை மாதிரிகளாகச் சித்திரிக்கும் பண்பு காணப்படுகிறது. நவீன இலக்கியத்துக்கு முந்திய இலக்கியங்களில் இத்தகைய ஒரு நிலைமை இருக்கவில்லை. பேரிலக்கிய வகைகளையும், சிற்றிலக்கிய வகைகளையும் பார்க்கும் பொழுது தனிப்பட்ட ஒரு பாட்டுடைத் தலைவன் முக்கியம் பெறுவதைக் காணலாம். சில பிரபந்தவகைகளில் (கோவை போன்றவற்றில்) கிளவித்தலைவன் எனும் ஒரு பாத்திரமும் கொள்ளப்படல் வேண்டும். ஆனால் அப்பாத்திரமோ கிளவித்தலைவியையோ வெறும் வாய்பாட்டுப் பாத்திரமே தவிர அதனைச் சமூக வகை மாதிரியாகக் கொள்ளமுடியாது. மேலும் தமிழிலக்கியத்தில் நாடக இலக்கியப் பாரம்பரியம்இல்லாதிருந்தமையாலும், இலக்கிய வகைகள் மூலம் சமூக வகை மாதிரிகள் பாத்திரங்களாக வார்க்கப் பெறும் வாய்ப்பு இருக்கவில்லை நவீன இலக்கியத்தில் இவை இன்றியமையாத வகையில் இடம்பெறுகின்றன.

— வளரும்

ஒரு புதையல்!

இந்தக் கதையின் பக்கங்கள் வழக்கமான மாருதத்தைவிட மேலதிகமானவை. நீங்கள் கொடுத்த இரண்டு ரூபாவுக்கு அப்பாற்பட்டவை. ஒரு அற்புதமான கதையைப் படிக்கப்போகிறீர்கள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இதைப்படைத்த கலைஞன் இன்று நோயும் பாயுமாக வாழ்க்கைக்கான எவ்வித ஆதாரமுமின்றி அவலப்படுகின்றான்.

எண்ணிப் பார்க்க நெஞ்சம் வேகிற கொடுமை. ஏனைய கலைஞர்களுக்கு ஒரு பாடம், அக்கலைஞனின் நிலை. இந்தப் படைப்பைப் படிக்கிற ஒவ்வொருவரும் இதற்கு எவ்வளவு சன்மானம் கொடுக்கலாம் என்று கருதுகிறீர்களோ அதனை காசுக்கட்டளையாக, அ. செ. முருகானந்தம், எழுத்தாளர், அளவெட்டி என்கிற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகின்றோம். இந்தப் படைப்பு விலைமதிப்பற்றதுதான். ஆனால் இதனைப் படைத்தவன் மூச்சு விடவேண்டி உங்களால் முடிந்ததை அனுப்புமாறு எமது வாசகர்களை வேண்டுகின்றோம்.

காளிமுத்துவின் பிரஜாஉரிமை

'அ. செ. மு'

இலங்கையின் சமூக பொது வாழ்வில் காளிமுத்து பிரமாத சேவைகள் புரிந்துவிட்டதாக அப்படி ஒன்றும் பிரமாதப்படுத்தவில்லை. அதனால் இலங்கையின் கௌரவப் பிரஜையாக அரசாங்கம் அவனை ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியாகத்தான் இலங்கை மண்ணில் அவன் வாழ்ந்தான்.

காளிமுத்துவின் குடும்பம் ஒரு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து மலைநாட்டை வாழவைத்து. அந்த மூதாதைகளின் வியர்வையில் செழித்து வளர்ந்துதான் இன்று ராஜகிரித் தோட்டம் கம்பீரத்தோற்றங்கெண்டு குளுகுளுவென்று நிற்கிறது. ஏன்,உண்மையைச் சொன்னலென்ன மலைநாடு இன்றைக்கெல்லாம் மலை போல நிமிர்ந்து நிற்பது இந்தியப் பாட்டாளிகளின் உழைப்பின்மீது தான்.

பிரிட்டிஷ்காரன் இலங்கையில் கோப்பிச்செடி பயிரிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய காலத்திலேயே காளிமுத்துவின் முற்சந்ததிகள் தோட்டத் தொழிலாளிகளாக இலங்கையில் குடியேறினுர்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமைபற்றிய பேச்சு ஊரில் அடிபட்டபோது ராஜகிரித் தோட்டத்தை இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போகிறதென்றும் இலங்கைப் பிரஜைகளாயுள்ளவர்களை மட்டுமே அது வேலைக்கமர்த்துமென்றும், பிரஜாவுரிமை பெருத இந்தியர்களை இந்தியாவுக்கே அனுப்பிவிடப்போகிறதென்றும், ஆகவே தோட்டத் தொழிலாளர்கள் ஆக வேண்டிய அத்தாட்சிகள் காட்டி தங்களை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்றும் காளிமுத்துவுக்குத் தகவல் கிடைத்தது.

தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது வேறு ஏதாவது அரசியல் கூத்தடிப்பதற்கோ அவன் பிரஜாவுரிமைக்கு ஆசைப்படவில்லை. அவன் கவலைப்பட்டதெல்லாம் வருங்காலச் சந்ததிகளாக விளங்கவிருக்கும் அவனது பிள்ளைகுட்டிகளை எண்ணித்தான்.

காளிமுத்துவுக்கு ஒரு மனைவியும் ஒரு தாயும் மூன்று பிள்ளைகளுமுண்டு. குளுகுளுவென்ற மலைச்சுவாத்தியத்திலே முனசிங்காவுக்கும் அப்புஹாமிக்கும் பிறந்த குழந்தைகளைப்போலக் குவாகுவா என்று கத்திக்கொண்டுதான் அவைகளும் பிறந்தன. உடலின் வலுவைப்பிழிந்து உழைத்த இத்தனை காலத்திலும் காளிமுத்துவுக்கு மிஞ்சியதேட்டம், சம்பாத்தியம் இதுதான்-ஐந்து ஜீவன்கள் கொண்டதொரு பெரியகுடும்பம்.

இந்த குடும்ப பளுவோடும், தளர்வடைந்த கைகளோடும் இனிமேல் இந்தியாக் கரைக்குப் போய் அவனுல் என்ன செய்ய முடியும்? பிள்ளைகுட்டிகளின் வருங்காலத்திற்குத்தான் அங்கு எந்த வழியை வகுப்பது?

ஆகவே, பிரஜாவுரிமை பெறுவதற்கான மார்க்கத்தை காளிமுத்து தேடத் தொடங்கினுன். இதற்காக அங்குமிங்கும் சிந்தனைகளும் ஆசைகளும் உண்டாயின. தேயிலைக் காட்டுக்குள்ளே உரிமையற்ற அனுமதேயமாக அவனது பிரேதம் புதைக்கப்படுவதை நினைத்தாலும் அவனது மனம் சற்றே வேதனைப்படத்தான் செய்தது. இத்தனை காலமாக வாழையடி வாழையாய் வாழ்ந்து பாடுபட்டபின் சாகும் பொழுதாவது வாயில்லாப் பூச்சியாகச் சாகாமல் வாக்குரிமை பெற்றுச் சாகக்கூடாதா? என்று ஒரு ஆசை அவன்மனதில் ஒரு மூலையில் இல்லாமல் போகவில்லை. ஆனுல், அதை அவன் வெளியே சொல்லுவானு? ஒரு தோட்டத் தொழிலாளியின் ஆசைக்குப் பெறுமதி-?

காளிமுத்து படி ஏறிய இடங்களில் பிரஜாவுரிமை கிடைப்பதற்குப் போதிய அத்தாட்சிகள் காட்டவேணுமென்று அவனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும் "அங்கே அவரைப்போய்க் காணு: இங்கே இந்தத் துரையைக் கண்டு பேசு" என்று அங்குமிங்குமாய் பலதடவை அவனை அலைக்கழித்தார்கள். இலங்கை வரும் இந்தியர்கள் இப்படியான நிலைமைகளில் அபூர்வமானசகிப்புத்தன்மையோடு நடந்துகொள்ள மண்டபம் கேம்பிலேயே பழகிக்கொண்டுவிடுகிறுர்களாதலால் காளிமுத்து பொறுமையோடு அங்குமிங்கும் போய் அவரையும், இவரையும் பதினுறு தடவைக்கு மேல் பார்த்தான். பார்த்துப் பயனென்ன?

"அத்தாட்சி வேண்டும்; பிறப்புப் பத்திரங்கள் காட்ட வேண்டும்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள் வெள்ளைக்காரத்தோட்ட சூப்ரண்டன் ஆட்சியிலே அவன் அத்தாட்சிக்கு எங்கு போவான்? பிறப்புப் பத்திரங்களுக்குத்தான் எங்கு போவான்?

"ஐயா, எனக்குஒரு குழந்தை பிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வச்சிருக்கோம்: எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்" என்று தோட்ட சூப்ரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும் போதே, அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துக் கிளார்க்துரை 'என்னடா அது, கருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே? சின்னகாளிமுத்து என்று சொல்லடா' என்று அதட்டி 'சி. கா'. மட்டும் போட்டு விஷயத்தை முடித்துவிடுவான். இந்த நிர்வாக லட்சணத்தில் அங்கே பிறப்புப்பத்திரங்களா இருக்கும். ஆனுல் பதிவு உத்தியோகத்தர்கள் என்னமோ பிறப்புப்பத்திரங்களைக் கேட்கத்தான் கேட்டார்கள். அத்தாட்சி கொண்டுவா என்று கூச்சல் போடத்தான் போட்டார்கள்.

"கைப்பூணுக்கு கண்ணுடியிலா அத்தாட்சி காட்டவேணும் ஐயா? அதோ பாருங்கள், எங்கள் கைபட்டு எங்களது சொந்த வியர்வையும் இரத்தமும் பாய்ச்சி சந்ததியாக நாங்கள் பண்படுத்தி

இவர் இப்போது....

சென்ற இதழில் இவர் இப்போது என்ற தலைப்பில்குறிப்பிட்டிருந்தவரை சிலர் ஊகித்திருக்கலாம்.

இதோ விடை:

தமிழகத்தின் முன்னணிப்பத்திரிகையாளர்களில் ஒருவரான ஆ. துரைக்கண்ணுவே அவர்.

படைப்பாளிகளுக்கு....

உங்கள் படைப்புக்களை நூல்வடிவில் வெளியிட விரும்புகிறீர்கள். ஆனுல் எதிரான சிரமங்களினதும் தடைகளினதும் பலம் உங்களைச் செயற்பட விடுவதாயில்லை. இது நாட்டின் ஆத்மாவையே பீடித்துள்ள நோய்.

இதன் சகல அம்சங்களையும் புரிந்துள்ள நாங்கள் படைப்பாளிகளுக்கு ஒருகை கொடுக்க துணிந்து முன்வந்துள்ளோம். சில நூல்கள் சிறந்த அமைப்பில் தயாராகிக் கொண்டிருக்கின்றன. நல்ல வாய்ப்பினை நீங்களும் பயன்படுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த தோட்டங்களை!'' என்று சொன்னால் அது செவியில் ஏறமாட்டாது.

'அதற்கு அத்தாட்சி.....?

காளிமுத்து சோர்வடைந்தான்.

கடல் கடந்த இந்தியரின் உழைப்பைத்தான் அரசாங்கம் காட்டில் எறிந்த நிலவைப்போல இம்மாதிரி ஒதுக்கிவிடுகிறதென்றால்,அவர்கள் பகலுமிரவும் வெயிலும் மழையும் காடும் மலையும் பார்க்காமல் பாடுபட்டதெல்லாம் தான் தண்ணீரில் கரைத்த புளி போலப் போய்விடுகிறதென்றால் அந்த துர்பாக்கியசாலிகள் பிறப்பு இறப்பு இல்லாத அசேதனப் பொருள்களாகவுமாஆகிவிட்டார்கள் என்று காளிமுத்துவின் நெஞ்சம் கலங்கியது.

''வாருங்கள்,அத்தாட்சி காட்டுகிறேன்'' என்று வாக்குப் பதிவு உத்தியோகஸ்தர்களை காளிமுத்து ஒரு தினம் வீட்டின் பின்பக்கமாய் தேயிலைக் காட்டுக்குள்ளேஅழைத்துச் சென்றான்.

உழைத்து வளர்ந்த அரசங்கன்று ஒன்று அங்கே நின்றது. அதைச் சுற்றிவர உத்தியோகஸ்தர்களை நிற்கும்படி கேட்டுக்கொண்டு காளிமுத்து கையோடு எடுத்துச்சென்ற கோடரியைக்கொண்டு அதை வெட்டத் தொடங்கினான்.

ஒரு குறிபபு

இவ் விதழிலுள்ள மார்க்ஸ் கடிதத்தைதமிழில்மொழிபெயர்த்தவர் டாக்டர் என். ஆர் அவர்கள்.

காளிமுத்து உணர்ச்சி வசப்பட்டிருந்தானென்பது அவனுடைய ஒவ்வொரு காரியங்களிலும் தென்பட்ட பதட்டத்திலிருந்து தெரிந்தது. உத்தியோகஸ்தர்களுக்கு கோடரியையும் காளிமுத்துவின் பதட்டத்தையும் பார்த்து கொஞ்சம் யோசனைதான். என்றாலும், பேசாமல் நின்றார்கள்.

அரசங்கன்றை அடி மரத்தோடு வெட்டி வீழ்த்திவிட்டு மண்ணுக்குக் கீழே புதையுண்டிருந்த மரத்தின் வேர்ப்பாகத்தை அவன் கிளப்பத் தொடங்கினான்.

பதிவு உத்தியோகஸ்தர்களுக்கு இதெல்லாம் விசித்திரமாகத் தோன்றிற்று. ஆனாலும் முடிவு என்னவென்பதை அறியும் ஆவலில் பேசாமல் நின்றார்கள். பிறப்புப் பத்திரங்களை ஒரு சமயம் மண்ணுக்குள்ளே புதைத்து வைத்திருக்கிறானோ, பைத்தியக்காரன் என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அரசமரத்தின் அடிப்பாகமும் வெளியே கொண்டுவரப் பட்டாயிற்று நிலத்தில் மூன்றுமுழ ஆழத்துக்குமேலே காளிமுத்து கிடங்கு தோண்டிவிட்டான். மேலும் தோண்டிக்கொண்டே போனான். பதிவு உத்தியோகத்தர்கள் சற்றே பொறுமை இழந்தார்கள், 'யாருக்கப்பா குழிதோண்டுகிறாய்' என்று கிண்டல் பண்ணினார்கள்.

''இன்னும் சற்று நேரம் பொறுத்திருங்கள், துரைமார்களே'' என்று காளிமுத்து கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். கிடங்கு இப்பொழுது அவன் கழுத்தை மறைத்தது.

மண்வெட்டியில் ஏதோ ஒரு சடினமான பொருள் தட்டுப்படவே காளிமுத்து பரபரப்பாகவே குனிந்து மண்ணைக் கிளறி அதை எடுத்தான் அது ஒரு கல்லு ''இது என்ன சனியன் இதுக்குள்ளே'' என்று வெறுப்போடு தலையைச் சுழட்டி மேலே வீசினான். அது மேலே நின்ற உத்தியோகத்தர் ஒருவரது தலையில் லொடக்கென்று விழுந்தது. 'ஏ வெளியே ஆட்கள் நிற்பதுதெரியவில்லையா'' என்று ஒரு அதட்டல்.

காளிமுத்து மேலும் கிடங்காகத் தோண்டினான். இப்பொழுது மண்ணுக்குள்ளே இன்னொன்று பளிச்சிட்டது. புழுப்போல சுருண்டுபோய்க்கிடந்த அதை அவன் எடுத்துக்குலைத்தான். அதைப் பார்த்தபோது அவன் கண்கள் கலங்கின. அதுஒரு வெள்ளி இருப்புக்கொடி. கண்ணிலே ஒற்றிக் கொண்டு மடிக்குள்ளே அதை பத்திரமாகச் சொருகி வைத்தான்.

குழி இப்பொழுது அவன் தலையை மறைத்தது. உத்தியோகஸ்தர்களுக்கு நின்று கால்சோர்ந்து போயிற்று. சற்றே பின்பக்கமாக விலகி வெட்டிவிழுத்திய அரசங்கன்றுக் கிளைகளின் மீது உட்கார்ந்தார்கள்.

இருந்தாற்போலிருந்து காளிமுத்து துள்ளிக் குதித்தான்.

''இதோ அத்தாட்சி கிடைத்துவிட்டது. நான் இலங்கையின் பிரஜை. அதற்கு இதைவிட இன்னும் என்ன அத்தாட்சி கேட்கிறீர்கள்?'' என்று எங்கோ கிணற்றுள் இருந்து வருவது போல அவனது குரல் கேட்டது. அதைத்தொடர்ந்தாற்போல மண் பிடித்த பொருளொன்று வெளியே உத்தியோகஸ்த்தர் முன்பாக வந்து விழுந்தது. அவர்கள் ஆவலோடு ஓடிப் போய் அதை எடுத்துப் பார்த்தார்கள்.

அது ஒரு மனித பிரேதத்தின் கை எலும்பு.

''ஐயா துரைமார்களே, இது என் பாட்டனாரின் கை எலும்பு. எத்தனையோ வருஷங்களுக்கு முன்னே அவர் இங்கு புதைக்கப்பட்டவர் என்னை இலங்கைப் பிரஜையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லையென்றால் என்னை இந்தக் குழியிலே வைத்து உங்கள்கையினாலேயே என்னை தள்ளிவிட்டு புதையுங்கள்'' என்று காளிமுத்து மறுபடியும் சத்தம் வைத்தான்.

காளிமுத்துவின் பாட்டனின் கை எலும்பை உத்தியோகஸ்தர்கள் கையாலெடுத்தபோது அவர்களுக்கு ரோமம் புல்லரித்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

''பாவம், அவனுக்குக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது'' என்று அவர்களில் ஒருவன் சொல்லிகொண்டு வெளியேறினான். மாட்டுக்குப்பின் வால் போல சக உத்தியோகஸ்தர்கள் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

வெட்டி வீழ்த்திய அரசமரத்தின் இலைகள் அப்போது வீசிய மலைக்காற்றுக்குச் சலசலக்கவில்லை. அவை வாடிப்போய் விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குள் நடப்பது - 1

பாண்டி — O — யூரன்

நான் சொல்வ தெல்லாம்
நமக்குள் நடப்பதுதான்;
ஏன்தோழா என்னை
இதுவரையில் நம்பவில்லை!

பண்டங்கள்
ஆழிப் பரப்பில் திரண்டதெனக்
கொண்டடி போட்டுக் குடைந்து
கடல்துளாவி,
கோர்வைக் கொடியாய்க் குவிந்து
வலையிழுத்தோம்!
வேர்வை குளத்து
வெயில்முழுக்கு ஆடியுமென்...?
பாரைகளும் சூரைகளும்
- பட்டதுதான்;

ஈற்றில்....
வலைவெடிக்க, சும்மா வந்தவர்
அள்ளும் நிலைதான் நமக்குள்ளே!
நீயறிந்த உண்மையிது!

- O -

வானத்தில் கார்மேகம்,
மண்ணில் அனற்காடு!
ஏனத்தில் சாப்பாடு,
இரைப்பையில் கொப்புளங்கள்!
நான் சொல்வ தெல்லாம்
நமக்குள் நடப்பதுதான்.
ஏன்தோழா என்னை
இதுவரையில் நம்பவில்லை!
ஊரின் உடன்படிக்கை
ஓம்பும் கழகத்து வேரில்
– அறக்கொத்தி

சாராயப் போத்தல்களே
சாதனையின் சக்திவடி வேலென்று
அர்ச்சித்தோம்!
மீதம் இருப்பதெல்லாம்....
வேல்பாய்ந்த பஞ்சுமலை!

- O -

சங்கை படைத்த சனங்களின்
சால்வைபற்றித்
தங்கள் முகக்கரியைத்
தட்டித் துடைப்பவரே
எங்கும் முளைத்தார்!
இது நெருஞ்சி முட்காடு
புஷ்பங்கள் பொன்விரிப்பு;
எப்படிநாம் கொய்தெடுத்தல்...?

நான் சொல்வ தெல்லாம்
நமக்குள் நடப்பது தான்
ஏன்தோழா என்னை
இதுவரையில் நம்பவில்லை!

– O –

ஊரிரண்டு பட்டு
உறவுமுறி வுற்றக்கால்...
பார் அந்தக் கூத்தாடி பாதத்தில்
சக்கரங்கள்!
வாழையடி வாழை வரலாறு
தப்பவில்லை!
நாளைக்கு அப்பாலும்
நம் கோயில் தெய்வத்தால்
தாழம்பூ சூடித் தலைவாசம்
காணவொண்ணு!
நானூறு ஆண்டாக
நாம்வளர்த்த தீக்குழியில்
பாலூற்றி நூர்க்கப் படும்பாடு
கொஞ்சமில்லை!
கோயிற் கணக்கு வழக்குகளின்
அட்சரங்கள்,
ஆழிக் கரையின் அலைபட்ட
சித்திரங்கள்!
வேட்டிக் கிருபெயர்...
வெள்ளையொன்று,
-வேட்டியொன்று!
தும்புத் தடியும் துடைப்பமும்
ஈர்பிறப்பு!
நம்பும் படியே நடந்த
– பரம்பரை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகங்கள் — தொடர்ச்சி...

மூட்டம் விலகியதில்தான் மகேஸ்வரனின் பணம் கேட்கும் முடிவு.

''சரி உம்மட விருப்பம். உமக்கு உத்தியோகம் பார்க்கப் பலன் இல்லையெண்டால் நான் என்ன செய்யிறது... உம்மட அலுவலாய்த்தான் காசைக் குடுத்திட்டன் ஒரு கிழமையிலை வாங்கித்தாறன்...''

''ஒரு கிழமையிலை...''

மகேஸ்வரன் தன்னுலேயே விலக்கமுடியாத நம்பிக்கையோடு புறப்படுகின்றுன்,

முற்றத்தில் நின்ற காரைக் கடந்து.. மோட்டார் சைக்கிளை கடந்து,.. பிறகும் ஒரு காரைக் கடந்து... அந்தப் பெரிய பங்களாவைத் திரும்பிப் பார்த்து.,.

'ஒரு கிழமையில...''

மகேஸ்வரன்கேற்றைக்கடக்கிறுன்

''என்னப்பா சொன்னனியள்''

''ஒரு மாசத்தில ஒரு மாசத்தில எண்டன் இனி ஒருகிழமையில ஒரு கிழமையில எண்டு சொல்லப்போறன் அவ்வளவுதான்.''

''பிறகு...''

'' பிறகென்ன அலைஞ்சலைஞ்சே அவன் சாகமாட்டானு''

சுவர்களில் எதிரொலிக்கும் சிரிப்பை மிஞ்சி கேற்றின்வெளியே மணி அடிக்கிறது.

யன்னலால் முகம் நீட்டி இழுத்து அவள் சொல்கிறுள்.

''கடிதம்...''

இலக்கியப் பத்திரிகையொன்றிலிருந்து கடிதம் வந்திருந்தது. அவனது 'சிறந்த' படைப்பு ஒன்றைக் கேட்டு...

பிரிய வாசகர்களே....

மணிமொழித் தொகுப்புகள், விடுகதைகள், வாழ்த்துக் கடிதங்கள் போன்றவற்றில் உங்கள் நேரத்தை வீணுக்காதீர்கள். படைப்புக்களை ஆக்க முயற்சியுங்கள் அது பற்றிப் பரிமாறிக்கொள்வோம். காத்திரமான அபிப்பிராயங்களை எழுதுங்கள். பயனுள்ள கேள்விகளை எழுப்புங்கள்.எல்லாவற்றிலும் மேலாக இந்த நல்ல முயற்சியினது விசாலிப்பைக்கருதிஉங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப் படுத்துங்கள். மாருதத்துடனை உங்கள் உறவு இன்னும் வலுக்கட்டும். நீங்கள்தானே மாருதத்தின் ஜீவநாடி.

ஒரு கதை எழுதி அனுப்புவது தான் என்று முடிவுசெய்து... எதனை எழுதுவது என்று பிடரி மயிர் கோதியபோது...

சற்று முன்னுல் வந்துவிட்டுப் போன மகேஸ்வரன். அவனது கதை. அவன் ஏமாந்த... ஏமாறப் போகிற கதை...மனதில் விரிகிறது

அவ்வளவையும் எழுதி இறுதியில் ஒருதிருப்பம்.

''கனன்று எழுகின்ற மகேஸ்வரன் அவனுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுத்தான் திரும்புவான்'

இவனுக்குப் புல்லரித்தது. பயத்திலுல் அல்ல.இந்தக் கதை பத்திரிகையில் வந்ததும் 'ஏமாற்றுக்காரர்களினதும் நய வஞ்சகர்களினதும் முகமூடியைக் கிழித்து எழுச்சியூட்டும் படைப்பு' என்று குவியப்போகிறபாராட்டுக்களை நினைத்துத்தான்.

பாட்டாளி வர்க்கத்தில் இருந்து ஒரு படைப்பாளி

— பூ. அ. துரைராஜா

புற்றீசல்கள் போல் தோன்றி, தோன்றிய சுவடு பதிக்காமல் மறையும் இக்கால எழுத்தாளர்கள் பலர். தனக்கென தனிபாணியும், சிறந்த லட்சியமும் கொண்டு படைப்பாற்றலில் முத்திரை பதித்தவர் தான் காலத்தால் மறக்கமுடியாத, படைப்பாளியாக நிலைத்துத் திகழ முடியும்.

அத்தகு எழுத்தாளர்களிலே இராஜபாளையம் நகர் ஈன்ற சிறந்த கவிஞர், படைப்பாளி கொ. மா. கோதண்டம் அவர்களும் ஒருவர்.

மிக இளம்வயதிலேயே தகப்பனுரை இழந்து தாயாரின் பராமரிப்பில் வாழ்ந்து, வளர்ந்தவர். குடும்பத்தில் வறுமைகாரணமாக, தான் பள்ளியில் படிக்கமுடியவில்லையே என்ற ஏக்கம் அந்த அறிவினை நூலகங்களில் தேடவைத்தது.

பதினைந்தாம் வயதிலேயே மார்க்ஸீயக்கருத்துக்கள் அவர்உள்ளத்தில்பதிந்தது. பலபுத்தகங்களைப் படித்துத் தெளிந்த அவ்விளம் வயதில் நூற்பாலைப்பணியில்சேர்ந்தார். நல்ல முற்போக்குச்சிந்தையிலே ஊறியஅவர் மனம், அடுக்குமொழிகள்பேசிபல்லாயிரக்கணக்கான இளம்உள்ளங்களைத் த பால் ஈர்த்த திராவிட மாயையில் சிக்கியது. சிறிதுகாலம், அண்ணு, பெரியார், கருணநிதி எழுதிய புத்தங்களை எல்லாம் விரும்பிப் படித்து மார்க்ஸீ த்தை மறந்தபோதுதான், ராமகிருஷ்ண பரமஹம்சரை நாடி விவேகானந்தர் சென்ற மாதிரி பன்மொழிப் புலவர் திரு. மு. கு. ஜகந்நாத ராஜாவின் நட்பு நாடிச் சென்ருர் அந்த நந்தாவிளக்கு, காட்டிய ஒளியில் வழி பிசகாமல்சென்ருர் கோதண்டம். அவரின் நட்பு

கோதண்டம் அவர்களை புது மனிதனாக இலக்கியத் தேன்மாந்தும் வண்டாக ஆக்கி தன்னம்பிக்கையுடன் இலக்கிய உலகில் பீடு நடைபோட்டு நிமிரச் செய்தது.

ஒரே நூற்பாலையில், ஒரேஇடத்தில் நானும் அவரும் வேலை செய்தபோது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அவரின் நல்ல உள்ளம் தந்த போதனையும், என்னை கவிஞனக, எழுத்தாளனக மாற்றியது.

கோதண்டம் அவர்களிடம் எதைப்பற்றியும் விவாதித்து யாரும் வெற்றிகண்டதில்லை. ஏனெனில் புலமையும், புத்திகூர்மையும். சமத்காரத்திறனும், ஆணித்தரமான கருத்தும் எதிரியை மடங்கச் செய்யும்.

தான் கற்றதை விரித்துரைக்க தனது இல்லத்திலே மாணவ, மாணவிகளுக்கு திருக்குறள் வகுப்பும், தெலுங்குவகுப்பும் நடத்திய பெருமை இவருக்குஉண்டு சிறந்த இலக்கியத்தொண்டிற்காகவும், புலமைக்காகவும் சென்னை ஆரிய ஐசுவரிய ஆயுர்வேத சமாஜம் இவருக்கு, 'பண்டி தரத்ன' என்ற பட்டத்தை வழங்கியது.

பன்மொழிப் புலவர். நிறுவிய மணிமேகலை மன்றத்தில் தொண்டாற்றி இன்றுவரை அரிய ஒப்பற்றபலநிகழ்ச்சிகளைநடத்தி மன்ற, பொதுச் செயலாளராக பொறுப்பேற்று மன்றத்தைப் பேணி வளர்ப்பதிலே முதன்மையாளராகத் திகழ்ந்து வருகிருர்.

அன்பும், பணிவும், பண்பும் அவரின் 'உயர்ந்த குண நலன்கள். இலக்கிய உலகில் தன் படைப்புக்களில் ஒரு முத்திரை பதிக்கவேண்டும் என்ற ஒரேகுறிக்கோளும், வேட்கையுடனும் படைத்து வருபவர் கோதண்டம்.

தாய்மொழி தெலுங்கானலும், தமிழின்பால் தா கொண்ட உயர் மதிப்பும், பக்தியின் காரணமாக தன் குழந்தைகள் இருவருக்கும் குறளமுதன் இளங்கோ எனப் பெயரிட்டு இன்பம் கண்டார்.

''சின்னச் சின்ன அரும்புகள்'' என்ற குழந்தைப் பாடல்கள் தொகுதியில் உள்ள பாடல்கள் சிலவற்றை பலபள்ளிகளில் குழந்தைகளுக்கு இசையுடன் சொல்லித் தருகிருர்கள். அதில் சில கவிதைகளை குழந்தைகள் படத்தயாரிப்பாளரான திரு.எம்.பி. சீனிவாசன் அவர்கள் திரைப் படத்தில் குழந்தைகளால்பாடவைத்திருக்கிருர்.

அவருடைய சிறுகதைகள் மலைவாழ்மக்களின் துன்ப துயர் வாழ்க்கையை எடுத்துக்காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெதாக திகழும். ஏனெனில் எங்கோ இருந்து கொண்டு வெறும் கற்பனையாக எழுதுவதில்லை. அம்மண்ணில் வாழ் மக்களின் இருப்பிடம் சென்று வாராக்கணக்கில் தங்கி, அவர்கள்படும் அல்லல்களை அணு, அணுவாக நுணுகிப்பார்த்து இதற்கெல்லாம் தீர்வு காண்பது யார் என்பதை இந்தச் சமுதாயத்திற்குத் தந்தவர் கோதண்டம் அவர்கள். அவருடைய ''ஆரண்யகாண்டம்'' சிறுகதைத் தொகுதி வெளிவந்தவுடன் பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது.

ஆரண்யகாண்டம் 1982ம் ஆண்டின் சிறந்த தமிழ் நூலாக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ 2000/- 1ம் பரிசு பெற்ற ஒப்புயர்வற்ற நூல். இந்நூல் மதுரை வேடிடோக் மகளிர் கல்லூரியில் M.A.க்கு துணைப்பாட நூலாக வைக்கப்பட்டது.

மற்றுமொரு சிறுகதைத் தொகுதி ''மலையின் மைந்தர்கள்'' இதுவும் குறிஞ்சிக் கதைகள் தான் சிறந்த மதிப்பை பெற்றது.

''கோழிக் குட்டிகளும், பன்றிக் குஞ்சுகளும்'' என்ற புதுக்கவிதை நூல் பல புதுக்கவிதைத் திறனாய்வாளர்களால் விமர்சனம் செய்து பாராட்டுதலைப் பெற்ற சிந்தனையைக் கிளறும் முற்போக்கு கருத்துக்களைக் கொண்ட அருமையான நூல்.

இவருடைய குறிஞ்சிக் கதைகள், கவிதைகள் சிலவற்றை ரஷ்யாவில் திரு. விக்டர் பூர்னிகாவும், சிங்களத்தில் த். கனகரத்தினமும், ஹிந்தியில் சரஸ்வதி ராமநாதனும், மொழிபெயர்த்துப் பிரசுரமாகி பாராட்டைப் பெற்றுள்ளது.

1980ல் சென்னை வானொலி பதிப்பகத்தார் இவருடைய முதல்நாவலான ‘ஏலச் சிகர’த்தை வெளியிட்டனர். குறிஞ்சிக் கதைகளுக்கோர் சிகரமாக அருமையான வர்ணனையுடன் கவிதை நடையில் எழில்கொஞ்சும் நடையுடன், சிறந்த கதையமைப்புக் கொண்ட அற்புத நாவலாக தமிழக அறிஞர்களால் போற்றப்படுகின்றது.

தன்னைச் சுற்றியுள்ள மலைவாழ் மக்களின் நலிந்த வர்க்கத்தின் வாழ்க்கையைப் பார்க்கிறார். அதில் அவர்கள் படும் கஷ்டத்தை, வேதனையை, ஏழ்மையை உணர்கிறார். இந்த பிரச்சினைகளுக்கு, இவர்களின் வேதனைக் குரலைத் தீர்ப்பதற்கு தனது படைப்புக்களின் மூலம் உலக சமுதாயத்திற்கு அறைகூவல் விடுக்கிறார்.

ஃ ஃ ஃ

அடுத்த இதழில்:

ஒரு வரலாற்றின் முதுகெலும்பு

— சுபன் எழுதுகிறார்.

நூல் நிலையம்

— நந்தன

இரண்டாவது சூரிய உதயம்

ஆசிரியர்: சேரன்

28 பக்க அளவுடன் வயல் காலாண்டிதழாக தொடர்ந்து வெளிவரும். ஒவ்வொரு இதழும் ஒரு தனிக்கவிஞருக்கு என..... முதல் இதழ் சேரனின் அரசியல் கவிதைகள் (அவர்களே குறிப்பிட்டபடி.....) பத்தினைத் தொகுத்து வந்துள்ளது. கவிதை எழுதப்பட்ட காலப்பகுதியில்தன் இனத்தின்மனதைப் பிரதிபலிக்க முயற்சித்திருக்கிறார் கவிஞர்.காலத்தின் தேவை என்பதைவிட இன்றைய ஈழத்து நிலைமை பல சேரன்களை நம் மத்தியில் உருவாக்கும் என்பதுதான் பொருத்தமானது.

இனி பொறுப்பதில்லை

ஆசிரியர்: சூர்யகாந்தன்

நெருப்புக்கவிஞனின் சிறுகதைத் தொகுப்பு இது. கவிதா பானுவின் அழகான வெளியீடு, படைப்பிலக்கியத் துறையிலே இளைய தலைமுறையினரை துவண்டுபோகாமல் முறுக்கேற்றி உற்சாகமூட்டும் திரு. வலம்புரி ஜான் ஆழ அகன்ற தமிழ் இலக்கியக் கடலில் முத்துக்குளித்து கரை சேர்ந்தவர்தான் சூர்யகாந்தன். அவரதுமுற்போக்குப் படைப்புக்கள் ஒவ்வொன்றும் அக்கினிக் குஞ்சுகள் அதன் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

பஞ்சமர்

ஆசிரியர்: டானியல்

ஒரு சரித்திர நாவல். ஆனால் தமிழ் கண்ட சரித்திர நாவல்களில் இது வித்தியாசமானது கல்கி, அகிலன், விக்கிரமன் வகையறாக்கள் போலல்லாது ஆசிரியர் தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கம் நிற்கிறார்.

அழியா நிழல்கள்

ஆசிரியர்: எம். ஏ. நுஃமான்

ஆசிரியரின் ஆரம்பகாலக் கவிதைகள் வெளியிடலாமா என்கிற தயக்கம் முன்னுரையிலேயேதெரிகிறது. அந்த தயக்கமே ஒரு ‘இது’ தான். இப்போது நான்......என்கிறமாதிரி அந்த அசட்டு வெட்கத்தை கவிதைகள் துடைத்துவிடுகின்றன. ஈழத்தின் சிறந்த கவிஞர்களை விரல்விட்டு எண்ணுகிறபோதுதட்டுப்படுகிறகவிஞரின் சாதாரணமான ஒரு தொகுப்பு.

அக்கினிக் குஞ்சு

ஆசிரியர்: செங்கை ஆழியான்

பெரும்பாலும் நாவல் ரைப் பண்ணியே பழகிப்போன பிரபல நாவலாசிரியர் செங்கைஆழியான் குறுநாவலுக்கு எடுபடவில்லை. குறுநாவல் வேறு தனியான இலக்கிய வடிவம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் காற்று

ஆசிரியர்: முல்லையூரான்

'அறிக நீ அடிமை' என்று வன்னி மரங்களில் உறுமின மந்திகள். முல்லையூரான் என்னமாய் கவிதைகளை நெய்கிறார் வார்த்தைச் சங்கிலியை அவர் முறித்து முறித்து தருகிற அழகு... இரண்டு ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த அவரது என் சித்தப்பா தொகுதியையும் போர்க் காற்றையும் அருகருகே பார்க்கிறபோது முல்லையின் வளர்ச்சி தெற்றெனத் தெரிகிறது. தேக்கமடையாது முல்லையூரான் கவி புனையும் முயற்சியில் ஈடுபடுகிறபோது இன்னும்ஒருஇரண்டுஆண்டுகளில் ஈழத்தின் சிறந்த கவிஞன் பிரசவமாகிவிடக்கூடும். அந்த நம்பிக்கையைத் தருவதே போர்க்காற்றின் சிறப்பு

காகிதக் கனவுகள்

ஆசிரியர்: மேத்தாதாசன்

இந்த முதிர்ந்த கவிதைக்கு முன்னுரையளிப்பது வெளிச்சத்துக்கு விலாசம் சொல்வது மாதிரி என்கிறார் இரா வேலுச்சாமி. இந்த முதிர்ந்த கவிதைகளைத் தந்தவர் வயதில் மிகவும் இளையவர். கனவுகளின் பரப்பு அதிகம் காகிதத்தில் அல்லவா? பறப்பும் அதிகம்.

நாணலின் கீதை

ஆசிரியர்: செம்பியன் செல்வன்

திருமுறை அருள வேண்டிய செம்பியன்செல்வ நாயனார் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்பதை மனங்கொண்டு படைத்தஅருந்தொகுப்பு.

காத்திருக்கின்றன கவனிப்புக்காக

சூரியமழை)(சேற்றில் மனிதர்கள்)(முற்றுப் பெறாத முதல் காதல்கள்)(தீபங்கள்)(யுக மலர்கள்)(வீதிகளை நேசிக்கும் வீணைகள்)(உதய காலங்கள்)(சிறகு முளைக்காத ஒரு பறவை

அடுத்த இதழில்:
'தேசிய இனப்பிரச்சனையில் தேசத்து எழுத்தாளர் பங்கு'
- சிவா சுப்பிரமணியம் எழுதும் கட்டுரை

இது விடயம் தொடர்பாக உங்கள் கருத்துக்களையும் கட்டுரை வடிவில் மாருதம் வரவேற்கிறது.

உங்கள்
அச்சு வேலைகள்
எதுவானாலும்

சிறந்த தரத்தில்
குறைந்த செலவில்
குறித்த நேரத்தில்
செய்துகொள்ள

எஸ். ஜே அச்சகம்
பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம், சென்னை,
பம்பாய், சிங்கப்பூர், மலேசியா, துபாய்,
லண்டன், அமெரிக்கா, கனடா...

நீங்கள் எந்த நாட்டுக்குச் செல்வதானாலும்
உங்கள் பயணத்தை நாங்கள் இலகுவாக்குகிறோம்.
விமானடிக்கட், பாஸ்போர்ட், விசா, ட்ரவலர்ஸ் செக்
அத்தனைக்கும் எங்களிடம் வாருங்கள்.

சத்தியசாயிபாபா, அன்னைவேளாங்கண்ணி, உட்பட
ஐம்பதுக்கு மேற்பட்ட தலங்களுக்கும் சரித்திரப்
பிரசித்திபெற்ற இடங்களுக்கும் யாத்திரை,

அடுத்த எமது தென்னிந்திய சுற்றுப்பயணக்குழுவில் சேர்ந்து கொள்ள
இன்றே எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

LANKA TRAVELS & TOURS

248, ANNAMALAI ROAD,
SUTHUMALAI SOUTH,
MANIPAY.

லங்கா ட்ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ்

248, அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதியிலுள்ள எஸ். ஜே. அச்சகத்தில் அச்சிடப்பெற்று எஸ். ஜே. பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுபவர், ஆசிரியர்: கே. பி. காண்டீபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org